Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

அக்டோபர்-2023
நாடார் :13
முரசு :10



இந்தியன்
INDIAN NADAR MURASU
# நாடார்முரசு

விலை
ரூ.15/-



Happy
Birthday

அக்டோபர்
17

அன்னை வேளாங்கண்ணி கல்வி குழுமத்தின் செயலாளர்
**Dr. D. தேவ் ஆனந்த்**
பிறந்த நாள்!

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி!!!

நீங்கா நினைவுகளில்
வாழும் எங்கள் தெய்வம்...

தோற்றம்:15.7.1977 மறைவு:18.10.2018



சக்தி ஸ்டோர்

## உயர்திரு.C.சிவக்குமார்

எண்:86, சி.ஐ.டி.நகர், சென்னை-35. செல்:9940245038

நீங்கள் பிரிந்தது எங்கள் கண்களை விட்டுதானே
தவிர இதயத்தை விட்டு அல்ல..!!

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,
செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,
டாக்டர்.S.தேவராஜ் Chairman
Annai Veilankanni's Group of Educational Institutions
R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்
தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்
டாக்டர் வி.ஜி.சந்தோஷம்
டாக்டர்.குமரேசன்
போரூர் ஆனந்தராஜ்
தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:
**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**
**போன்:044-23810610 (வீடு)**
**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:
**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**
**போன்: 044-23811087,**
**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100
ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.
மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,
தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு
ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100
ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:
The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian
IFSC Code: KVBL0001651.
**A/c No: 1651173000000900**
**Google Pay : 9382172884 paytm 9382172884**

# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!**



நாடார் சமுதாயத்திற்கு தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, இந்திய அளவிலும் ஏன் உலக அளவிலும் ஒரு உன்னத பெயர் இருக்கிறது. அதற்கு காரணம் நாடார்களின் ஒன்றுபட்ட உழைப்பு, நம் மூதாதையர்கள் உருவாக்கிய பாரம்பரியமான சங்கங்களே முக்கிய காரணம். நெல்லை தக்ஷசணமாறநாடார் சங்கம் அதைச் சார்ந்த உலகம் முழுவதும் அமைந்துள்ள கிளை சங்கங்கள், மதுரை மஹாஜன சங்கம் அதைச் சார்ந்து உலகம் முழுவதும் இயங்கி வரும் கிளை சங்கங்கள் அது போல ஒவ்வொரு மாவட்ட நாடார் சங்கங்கள், உதாரணமாக நெல்லை தூத்துக்குடி மகமை பரிபாலன நாடார் சங்கம் போன்ற சங்கங்கள் சமுதாய பணியை மட்டும் முக்கியமாக கையிலெடுத்து செயல்பட்டு வருகிறார்கள். அந்த சங்கங்கள் கல்விக்கு முதலிடம் கொடுத்து பல கல்விச் சாலைகளையும், திருமண மண்டபங்களையும் கட்டி சேவை மனப்பான்மையில் செயல்பட்டார்கள் என்பது குறிபிடத்தக்கது..

மேலும் வேறு பல சொத்துக்கள் சேர்ந்த சங்கங்கள் புதுப்புது உறுப்பினர்களை சேர்க்க பல நிபந்தனைகள் விதிக்கும் காரணத்தால் புதிதாக இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள். பல ஜாதி மோதல்களிலும் ஈடுப்பட்டார்கள். அந்த சமயம் பாதுகாவலர்கள் சின்னையா தலைமையில் இளைஞர்களை ஒருங்கிணைத்து நற்பணிகளை செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். அந்த காலம் இளைஞர்கள் ஒன்றுபட்டு அனைத்து ஜாதியினரிடமும் ஒருங்கிணைந்து நற்பணிகளை செய்தனர். மெர்க்கண்டைல் வங்கி மீட்பு பேரணிக்கு பின் இளைஞர்கள் ஒருங்கிணைந்து பேரவை உருவாக்கி அரசியல் சூழ்ச்சியால் நாடார் இளைய சங்கங்களில் (பேரவை) அரசியலை புகுத்தி பிரிவினையை அரங்கேற்றி விட்டனர். ஆனால் தற்கால இளைஞர்கள் தொலைத் தொடர்பு பிரபலமான பிறகு தனது ஆசைக்கு தகுந்தார் போல் வாட்ஸ்ஆப் குரூப் ஆரம்பித்து அந்த தளத்தில் உள்ளவர்களே ஒரு அமைப்பாகவும் அமைத்து கொண்டார்கள் ஒற்றுமைக்கு பேர் பெற்ற நாடார் சமுதாயத்தை பிரித்து பிரித்து பங்கு போட அரசியல்வாதிகள் சமுதாயத்தோடு அரசியலையும் சமுதாயம் அரசியலோடு மதவெறியையும் கலந்து சிதரடித்துக் கொண்டிருக்கிறார்கள். பழமையான நாடார்கள் பல சம்பவங்களில் ஒதுங்கி நடந்தாலும் ஜாதி, மதம், அரசியல் கலந்த தற்கால இளைஞர்கள் வழி நடத்த சரியான பொது நல தலைவர்கள் இன்றி வழிமாறி தனது பயணத்தை பயணித்து வருகிறார்கள். இளைஞர்கள் மத்தியில், உழைப்பு குன்றிய நிலையில் வணிக தொழிலை புறக்கணித்து இந்து மதம் அரசியல் ஜாதி கலந்த அமைப்புகளையே ஒருமுழு நேர தொழிலாகவும் செய்து வருகிறார்கள். இதே நிலை நீடித்தால் இந்த பேரு பெற்ற சமுதாயத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 2.எம்மதமும் சம்மதம்:

ஆரம்ப காலத்தில் நான் சிறுவனாக இருந்தபோது, என் அருமைத் தந்தையார் அவர்களின் மதம், மதம் சார்ந்த கொள்கை என்ன என்பது பற்றி எனக்குத் தெரியாது, அவர் வாழ்க்கையில்தேர்ந்தெடுத்த மனைவி, அதாவது என்னுடைய தாயார் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்ததாலோ, அவரது மதக்கொள்கையும் பொதுவானதாகவே இருந்தது. ஆனால், "எல்லா இனம், குலம், மதத்தவர்களையும் மதித்து வாழ்ந்து வந்தார்". என்பதே என் தந்தையின் ஒரு தனிச் சிறப்பாகும்.



"அன்பு"- என்ற ஒன்றையே அவருடைய மனதில் முதன்மையாக வைத்து, அந்த அன்பின் அடிப்படையில் அவர் வாழ்ந்ததால், தான் வணங்கும் இறைவன் மீது மிகுந்த பற்று இருந்தாலும், மற்ற மதங்களை அதாவது, இந்து, முஸ்லீலிம், பௌத்தம், ஜைனம் போன்ற மதங்களை மதித்து, அம்மதங்களைச் சார்ந்தவர்கள் மீது அன்பு செலுத்தி வாழ்ந்து வந்தார்கள்.

"மதங்களை மதிப்போம்
மனதால் இணைவோம்"

என்ற உயரியகொள்கையோடு, தன்னுடைய தொழிலை செய்து வந்தார். என்னுடைய தந்தையார் அவர்கள் ஆண்டு தோறும் வேளாங்கண்ணி மாதா ஆலயத்திற்குச் செல்லும் போது, அதற்கு முன்பாக நாகூர் நகருக்குச் சென்று, தர்காவில் வழிபாடு செய்து விட்டுச் செல்வது வழக்கம்.

அதே போல், திருப்பதி தேவஸ்தானத்திற்கு என்தாயாரை அழைத்துச் செல்வது வழக்கம்.ஒருமுறை காஞ்சிபுரம் செல்லும் போது, அங்கு காஞ்சி மகாப்பெரியவர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, காஞ்சிப் பெரியவர் என்தந்தையாரைப் பார்த்து, "பன்னீர்தாஸ்" என்று அழைத்து, "நீங்கள் ஒரு கிறிஸ்தவர்தானே" என்ற ஒரு கேள்வியைக் கேட்டபோது, என் தந்தையார், "நான் எல்லா தரப்பு மக்கள் மீதும் அன்பு செலுத்திப் பழகி வருகிறேன்"- என்றார். அதைக்கேட்ட காஞ்சிப் பெரியவர், "உனக்கு ஓர் அன்பு வேண்டுகோள், கலவை என்ற ஓர் இடம் இருக்கிறது. அங்கே எனக்கு ஒரு சிறிய வீடு கட்டித்தர முடியுமா? கலவைக்குச் செல்லும்போதெல்லாம் நான் பூஜை செய்வதற்கு வசதியாக இருக்கும். மேலும் இரண்டு வீடுகள் கட்டித்தந்தால் நான் தங்குவதற்கும் வசதியாக இருக்கும்" - என்று கூறினார். அப்போது என் தந்தை, "நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தும் என்னை மதித்து அன்போடு அழைத்து சொன்னது பெருமையாக இருக்கிறது, தாங்கள் கேட்டுக் கொண்டது போல் கலவையில் இரண்டு வீடுகளைக் கட்டித் தருகிறேன், என்று கூறிய அவர், கூறியவாறே "கலவை"யில் இரண்டு வீடுகளைக் கட்டித்தந்தார். அது மட்டுமல்லாமல் என்னுடைய திருமண நிச்சயதார்த்தம் முடிந்த பிறகு, என்னை காஞ்சிபுரத்திற்கு அழைத்துச் சென்று காஞ்சிப் பெரியவரின் "ஆசிரியை" - பெறச்செய்தார். பின்பு ஒரு நாள் என் தந்தையார் காஞ்சிபுரம் சென்று, என் திருமணத்திற்கு துணிமணிகள் வாங்கினார். அது தான் என் தந்தை காஞ்சிபுரம் சென்ற கடைசி நாள்.

என் தாயார் பாரிஜாதம் அவர்களைப் பற்றி கூறு விரும்புகின்றேன். என் தாயார் பாரிஜாதம் அவர்கள் காஞ்சிபுரத்தில் பிறந்து, வளர்ந்தவர்கள். அதனால்தான், எனக்குக் காஞ்சிபுரத்தின் மீது தனிப்பற்று உண்டு.

அதற்காகவே, காஞ்சிபுரத்தில் என் அருமை அன்னையின் பெயரினிலே ஒரு நகரை உருவாக்கி, விஜிபி பாரிஜாத நகர் என்னும் பெயர்சூட்டி, எங்கள் வீட்டுமனைத் திட்டத்தை நிறைவேற்றினோம்.

அந்த பாரிஜாத நகரில் மனைகள் வாங்கிய அனைத்து மக்களும், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தைப் பாராட்டுவார்கள். மேலும் அந்த இடத்தில் ஒரு சக்தி இருப்பதாகவும் கூறிவருகிறார்கள். மேலும், "பாரிஜாத மலர்மணம்" அங்கே, (காஞ்சிபுரத்தில்) வீசுவதாகவும் கூறிவருகிறார்கள்.




உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி துணை

**ஸ்ரீ மகாலட்சுமி ஜோதிட நிலையம்**

**நாடார் திருமண தகவல் மையம்.**

எண்:17, டாக்டர் அம்பேத்கர் சாலை, பெரியார் நகர் விரிவு, மடிப்பாக்கம், சென்னை-91.
நெல்லை எம்.ஆர்.இராமச்சந்திரன்நாடார்.,M.Sc., Astrology.
E-mail:yogamaster.chandran@gmail.com Ph:9786722267. 9444062989.
வாட்சஆப்பில் தொடர்பு கொள்ளவும்.



Prop.S.Balakrishnan
**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**

SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**



# நாடார் மறுமலர்ச்சி

**நாடார்களுக்கு எதிரான கலவரங்கள்**
**சிவகாசிக் கொள்ளையும், நாடார் சமாளிப்பும்**

1557இல் நாயக்கர் அரசே, நாடார்களை விரட்டியது. ஆனால், 1899இல் ஆங்கிலேய அரசு மீண்டும் இக்கொள்ளைகள் நடக்காதவாறு நடவடிக்கை எடுத்தது. கொள்ளைக்காரர்களைப் பிடித்து வழக்கு நடத்தி, உரிய தண்டனை வழங்கியது. இக்கொள்ளைக்குத் தூபமிட்ட பிராமணர்களும்,வேளாளர்களும் அரசு நடவடிக்கைக்குப் பயந்து ஒதுங்கிக் கொண்டனர். பொறுப்பற்றதனமாக மாவட்ட மாஜிஸ்ரேட் ஸ்காட் செயல்பட்டார் என்று கருதி, ஆங்கிலேய அரசு அவர் பதவியைப் பறித்தது. ராணுவத்தைக் கொண்டு கலவரத்தை அடக்கிய ஆங்கிலேய அரசு, போலீஸ் படையில் பெரும் மாறுதலைச் செய்தது.

**ஆங்கிலேய அரசின் கொள்ளைத் தடுப்பு நடவடிக்கை**

திருச்சி, கோயம்புத்தூர் முதலிய தொலைதூர நகரங்களில் இருந்து போலீஸ்களை மதுரை, சிவகாசி, திருநெல்வேலி, அருப்புக்கோட்டை, விருதுநகர் போன்ற பகுதிகளுக்கு அமர்த்தியது. இந்த பெரும்முக்கிய நகரங்களில் வெளியூர் பெரும்படையை நிறுத்தி, படையைப் பேணுவதற்கான செலவை நகரமக்களிடமிருந்து வரியாக வசூலித்தது. கொள்ளையடிக்க விடாமல் தங்களை தடுக்கும் படைக்கு வரி கொடுக்கும் நிலைமை ஏனைய ஜாதியினருக்கும், கொள்ளையரிடமிருந்து தங்களைக் காக்கும் படைக்கு வரி கொடுக்கும் நிலை நாடார்களுக்கும் ஏற்பட்டது. இது, நாடார்களுக்கு நன்மையாக முடிந்தது. கிராமங்களில், உள்ளூர் போலீஸ்களை நீக்கிவிட்டு, தொலைதூரப் போலீஸ்களைப் போட்டனர். கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு, வெவ்வேறு அதிகாரிகளை நியமித்தனர். பெட்ஃபோர்டு என்ற ஆங்கிலேய அதிகாரி, தக்க தருணத்தில் இந்த சரியான வழியைப் பின்பற்ற தவறியிருந்தால், நாடாருக்கு எதிரான கொள்ளை, கொலை பரவி, நாடார்களை அழித்திருக்கும் என்றார். இந்த நடவடிக்கையால் மதுரை, அருப்புக்கோட்டை, விருதுநகர் போன்ற நகரங்கள் தப்பின.

1899 செப்டம்பரில், ஸ்டீவன்சன் என்ற போலீஸ் டி.ஐ.ஜி. மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்த பல கிராமங்களை வெவ்வேறு காவல் நிலையக் கட்டுப்பாட்டுக்குள் மாற்றியமைக்க ஆலோசனை கூறினார். காவல் நிர்வாக மாற்றத்தால், பல கிராமங்களில் நாடார்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்றார். திருநெல்வேலி மாஜிஸ்ரேட் இதை ஆதரித்தார். ஆனால், ஹம்மிக் என்ற ஆங்கிலேய அதிகாரி, மாவட்ட காவல் நிலைய எல்லைகளை மாற்றியமைக்கத் தேவையில்லை என்றும், அவசர கலவரத் தடுப்பு படையை எந்நேரத்திலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். 1899க்குப் பின், அங்குமிங்குமாக நடந்த கொள்ளைகளில் நாடார்களும், மற்ற ஜாதிக் கொள்ளையர்களுக்கு சேதம் விளைவித்தனர். கலவரத் தடுப்புப் போலீஸூக்கு எதிராகச் செயல்படாமலும், கொள்ளையருக்கு உடனுக்குடன் பதிலடி கொடுத்தும், நாடார்கள் ஒற்றுமையுடனும், ஆள் பலத்துடனும், மகமை பலத்துடனும் தந்திரமாகச் செயல்பட்டனர். அதனால் பல இடங்களில் கொள்ளையர்கள், நாடார்களுக்கு எதிராகச் செயல்படுவது குறைந்தது. பின், 1905ல் இந்தக் கலவரத் தடுப்புப் படை கலைக்கப்பட்டது.

**கமுதிக் கலவரம்**

கமுதியானது, ராமநாதபுரம் ஜமீனில் இருக்கிறது. இங்கு நாடார்களில் பலர் செல்வந்தர்களாக இருந்தனர். நிறைய நாடார்கள் வியாபாரிகளாக இருந்தனர். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இந்த ஜமீனில் நிலக் கண்காணிப்பாளராக இருந்தார். இவர், ஊர் செல்வாக்குப் படைத்தவர். இவர் மகன் வெள்ளைச்சாமி தேவர் வழிப்பறி, கொள்ளை என்று தம் ஆட்களை நாடார்களுக்கு எதிராக ஈடுபடுத்தினார். நாடார்களை, ஊரார் புறக்கணிக்க வேண்டும், நாவிதர், வண்ணார் இவர்களுக்குத் தொண்டு செய்யக்கூடாது என்றார். நாடார் ஊர்வலத்துக்குத் தடை, இடைஞ்சல் என்று அட்டூழியம் செய்தார். நாடார் எதிர்ப்பு அணி என்ற அமைப்பை உருவாக்கினார். இதனால் ஆங்கிலேய அரசு அவரை சிறையிலடைத்தது. அதன்பின், நாடார் எதிர்ப்பு கொஞ்சம் குறைந்தது. (தொடரும்)


**EAGLE PRESS**
"DIARY HOUSE"
Ph : 25952694
35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email: eagle@giamd01.vsnl.net.in
Website : www.eaglepressgroup.com

**ஸ்ரீ முருகன் ஜோதிட நிலையம்**



வாக்கிய பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் கணித்து தரப்படும். உங்கள் எதிர்காலம், படிப்பு, உத்தியோகம், தொழில், திருமணம் எப்போது என்ற நிலை அறிய உடனே அணுகவும். ஜாதக ரீதியாக தோஷ நிவர்த்தி பரிகாரங்கள் சொல்லப்படும். மனையடி வாஸ்து சாஸ்திரமும் பார்க்கப்படும். உங்கள் மகளுக்கோ, மகனுக்கோ உடனே திருமணம் நடைபெற எங்களை நாடுங்கள். R.C, CSI மற்றும் இந்து நாடார், படித்த படிக்காத VIP பட்டதாரிகள், விதவைகள், ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன. இது அனைத்து நாடார் சமூகத்துக்கு மட்டும். ஆலோசகர் P.R.ராஜகோபல் நாடார், சேவைக் கட்டணம் நேரில்.

**ஸ்ரீ முருகன் திருமண தகவல் நிலையம்**

25/1, புதிய எண்:16, கிரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. செல்:9841239324.



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர்**
**காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)



உரிமையாளர்: த.பரமசிவன்

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,

24 மணி நேர சேவை

P.R. Dinakaran ஸ்ரீவனங்காத்த பார்வதி அம்மன் துணை Ph: 044-2440 1255
Mobile: 9884447771



**THIYAGARAJAN Bros**

Waste Paper & LED, LCD T.V, Lap Top, All Computer Items, Mobile Phones, A/C.Refrigrator, Washing Machine, All Metals & All kinds of Scrap Dealers

New No:20, 2nd Cross Street, Kasthuribai Nagar, Adyar, Chennai-20.



உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

**பேபி. புரோட்டீன்ஸ்**

**WHOLESALE & RETAIL**

2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அப்பனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி**

9789427171
7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.



**REVATHI LABEL PRINTERS**

R.DHEVI 98414 41111, 99415 51111

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.**

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்

## குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677 7200506699.



# JEHOVAH

## GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares

E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

வாழ்க வளமுடன்

C.மதியழகன்
செல்:9789095625.

# ஸ்ரீ கணேஷ் பவன்

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.










தென்னக சான்றோர் சங்கம் ஏழை மாணவர்களுக்கு இலவச டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான பயிற்சி மையம் 29.9.2023 அன்று சின்னமலை எண் 25 தாலுகா ஆபிஸ் சாலை சென்னை-15-இல் உள்ள சங்க அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சங்க கவுரவ தலைவர் பேராசிரியர் திரு.ஜெயராஜ் நத்தானியல் தலைமையில் திரு.விஜயகுமார் DD (Rt) மற்றும் பயிற்சி மாணவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழா ஆரம்பம் ஆனது.

பொதுச்செயலாளர் திரு.ஏசுதாசன் விழாவிற்கு வந்தவர்கள் வரவேற்றார். தொடர்ந்து விழா தலைவர் தலைமை உரை ஆற்றி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். திரு.விஜயகுமார் டிடி, திருமாரிமுத்து, தலைவர் திரு.ஜார்ஜ் ப்ராங்க்ளின், திரு.செல்வமணி இசி, மற்றும் திரு.சுகுமாறன் இசி, திரு.பன்னீர்செல்வம், இசி,

ஜே.எஸ்.அருள்பிரகாஷ் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். உ.தலைவர் திரு.டென்ஷன், Coordinator திரு.ஜெகன்னாதன், திரு.தங்கராஜ் இ.சி, திரு.பால்ராஜ், திரு.ராஜாமணி, பொன் அருணாச்சலப்பாண்டியன் மற்றும் மாணவர்கள் அவர்தம் பெற்றோர் சகிதம் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஜி.யேசுதாசன்...,

# காமராஜர் ஒரு சகாப்தம்

**வரலாற்றில் விருதுபட்டி**

தோழர்களுடன் ஊர் சுற்றுவதிலும் நாலு பேருடன் எதைப் பற்றியாவது விவாதிப்பதிலும் காமராஜ் அதிக உற்சாகம் காட்டினான். சில சமயம் வெயிலுகந்தம்மன் கோயில் தேர் மத்தியில் புத்தகத்தையும் பலகையையும் மறைத்து வைத்துவிட்டு ஊர் சுற்றுவதும் உண்டு. வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதை ஒட்டிநின்று கேட்பதும் உண்டு. அம்மணியம்மாள் தோட்டத்தில் கொடுக்காப்புலி காய் வேட்டையாடி, விதைகளைச் சேகரித்துச் சேத்தாண்டி வேடம் போடுபவர்களுக்கு மாலை தயாரித்துக் கொடுப்பதிலும் அக்கறை காட்டினான். நெற்றியில் பட்டையாகத் திருநீறு பூசி, சந்தனப் பொட்டிட்டுக் குங்குமம் அணிந்த, கண் பார்வை இழந்த, கருப்பு நிற மூதாட்டி பெரியநாயகி, விருதுபட்டி ஐந்து சந்திப்பில் 'காத்தவராயன் கதை' சொல்வதுண்டு. ஒரு சமயம் மக்கள் திரண்டிருந்தபோது காமராஜ் முறுக்கு, சுருட்டு, வெற்றிலை பாக்குப் பொட்டலம், புகையிலை, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையை மூதாட்டிக்குப் போட்டான். இதைச் சிலர் கண்டித்த போது, "பெரியம்மாவுக்கு விருப்பமானவற்றை நான் மாலை கட்டிப் போட்டேன்! அது தப்புன்னா அவுங்க சொல்லட்டும்" என்றான். கண் பார்வை இல்லாத அந்த அம்மையாருக்குக் காமராஜின் எதிர்காலம் தெரிந்திருக்கிறது! அவர் "என்னைப் போல கருப்பு..... நெற்றியில சந்தனக் காப்பு...... எங்க காமராஜா..... இந்த நாட்டை ஆள்வான் ராஜா......" என்று பாடிப் பாராட்டினார்.

அந்தக் காலத்தில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. காமராஜ் 'ஃபஸ்டு ஃபாரம்' (ஆறாம் வகுப்பு) மாணவன்; எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். காமராஜ் வெள்ளைக்காரன் நடை உடை பாவனையோடு ஆங்கிலம் பேசிக்கொண்டு பள்ளி செல்வதைக் கண்டு பாட்டி மகிழ்ந்தார். ஞானம்பிள்ளை பொட்டிக்கடையை அடுத்த திண்ணையில் வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதைக் கேட்டு, காமராஜ் மகிழ்ந்தான். மணியாச்சியில் ஆஷ்துரை சுட்டுக் கொல்லப்பட்டது, சிதம்பரம் பிள்ளை சிறையில் செக்கிழுத்தது முதலான செய்திகள் அங்கே பேசப்பட்டன. சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புடைய புதிய செய்திகளைக் கேட்டறிவதில் காமராஜ் ஆர்வம் காட்டினான். 'சுதேசமித்திரன்' நாளிதழ் உரக்கப் படிக்கப்பட்டபோது, பள்ளிக்கு மட்டம் அடித்த காமராஜின் தலையும் அங்கே தெரியும்.

பம்பாய், கல்கத்தா, கராச்சி, லக்னோ, சூரத் முதலான இடங்களில் கிளைகளை அமைத்து வாணிகம் செய்து வந்த கோவிந்தசாமி நாடார் சொந்த ஊரான விருதுபட்டியில் வந்து தங்குவது உண்டு. அவரை விருதுபட்டியில் 'பம்பாய் அண்ணாச்சி' என அழைத்தனர். அவர் விருதுபட்டியில் வந்து தங்கும்போது வடநாட்டுச் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை எல்லாருடனும் பகிர்ந்து கொள்வார். அப்படி ஒரு முறை வந்த பம்பாய் அண்ணாச்சி, வேலாயுதத் தேவர் பிள்ளையார் கோயில் திண்ணையில் அமர்ந்திருந்தார்; கூட்டம் திரளத் தொடங்கியது; ஞானம்பிள்ளையும் வந்தார்; பேச்சு வடநாட்டுச் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள் குறித்துத் தொடங்கியது.

1915 டிசம்பரில் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாடு, தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய மோகனதாஸ் கரம்சந்த் காந்தியின் முதல் சொற்பொழிவு, காங்கிரஸ் கமிட்டி மெம்பர் தேர்தலில் போட்டியிட்டுக் காந்தி தோற்றது, எதிர்த்தரப்பைச் சார்ந்தவராயினும் திலகர் தலையிட்டுக் காந்தியின் தேர்வுக்கு வழி வகுத்தது, கோகலேயின் மரணம், சுதேசி இயக்கம் சார்ந்த புரட்சிப் பணிகள் குறித்தெல்லாம் அவர் பேசினார். அன்று மாலை அம்மன் கோயில் பொட்டலில் நடந்த பொதுக்கூட்டத்தில் பம்பாய் அண்ணாச்சி ஆவேசமாக முழங்கினார். காமராஜ் உள்ளத்திலும் சுதந்திரப் போராட்ட உணர்வு முளைவிடத் தொடங்கியது. பொதுக் கூட்டச் செய்திகளைக் கேட்பதிலும் பத்திரிகைச் செய்திகளைப் படித்தறிவதிலும் ஆர்வம் உண்டாயிற்று. அவை அவனுக்குப் புதியதோர் உலகைக் காட்டின. (தொடரும்)



ஸ்ரீ கெஸ்ட் ஹவுஸ்

SHREE GUEST HOUSE

A/c & Non A/c Rooms Available. 9444683121. 9444180067.

57, East Raja Street, Mamallapuram, - 603104, Kanchipuram District.

New Happy Rewinty, 37, ஒத்தவாடை, நியர் பீச் ரோடு, 9443778291, 7338898291.




V.முருகானந்தம் - உரிமையாளர்

தலைவர் - 138வது வட்டம்

காங்கிரஸ் கமிட்டி

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும்,

வீடு, ஆபிஸ், கடை, குடோன், கம்பெனி

வாடகைக்கு அணுகவும். 9840583539.



எண்:42, அண்ணா மெயின் ரோடு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78,9840583539.



ஒன்றுபடுவோம்! வென்று காட்டுவோம்!!!

நம் குலத்தோன்றல், நமது பேரமைப்பின் வழிகாட்டி தலைவர்களில் ஒருவர், சுயமரியாதை இயக்கத் தலைவர், சமூக சீர்திருத்தவாதி, அச்சம் அறியா அடலேறு, உண்மைக்கு தோழன் - பொய்மைக்கு எதிரி, மொழிக்கும் நாட்டிற்கும் பிறந்த சமுதாயத்திற்கும் ஊருக்கும் உலகுக்கும் உழைத்த உத்தமர், அச்சம் அகற்றிய அண்ணல் பட்டிவீரன்பட்டி ஊ.பு.அ.சௌந்தரபாண்டியனார் அவர்களின் 131-வது ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இன்று (15.9.2023) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள இந்திய நாடார்கள் பேரமைப்பின் தலைமை அலுவலகத்தில் அன்னாரது திரு உருவ படத்திற்கு பேரமைப்பின் தலைவர் ராகம் சௌந்தரபாண்டியன் தலைமையில் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், பொருளாளர் ஏஎம்டி சிவக்குமார். கௌரவ ஆலோசகர் டி.பன்னீர்செல்வம், வியாபாரிகள் முன்னேற்ற அணி ஆர்.மாதவன், துணைச்செயலாளர் வெங்கட்ராமன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ரமேஷ், வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் ஆர்.வெங்கடேசன், பொருளாளர் டி.ஆர்.பி.குமரன், வியாபாரிகள் முன்னேற்ற அணி செயலாளர் ஜி.எட்வர்ட் ராஜா, தகவல் தொழில் நுட்ப அணி துணை தலைவர் செந்தில், ராயபுரம் பகுதிவியாபாரிகள் முன்னேற்ற அணி தலைவர் ஆர்.திரவியம், ஆர்.கே.நகர் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி தலைவர் ஆர்.ரவிராஜன், இளைஞரணி செயலாளர் தியாகவேல், தலைமை அலுவலக நிர்வாகி நா.சிவராஜ் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தலைவர் ராகம் சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசும் பொழுது திரவிட இயக்கங்களுக்கு முன்னோடியான நீதி கட்சியின் முக்கிய தளபதியாக விளங்கியவர் அச்சம் அகற்றிய அண்ணல் பட்டிவீரன்பட்டி சௌந்திரபாண்டியனார் என்றும், அவர் தனது சட்டமன்ற முதல் உரையில் நான் நாடார்களின் பிரதிநிதி எனவும் முழங்கியவர் என்றும், தனது தாயின் ஆணைக்கிணங்க தான் தொடங்கிய மதுபான ஆலை தொழிலை தனது நஷ்டத்தினையும் பாராமல் கைவிட்டவர் எனவும் புகழாரம் சூட்டினார். மேலும் சென்னை தியாகராய நகரில் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக அப்புறப்படுத்தப்பட்ட அவரது சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்றும், அங்கு வரவிருக்கும் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு "சௌந்திரபாண்டியனார் மெட்ரோ" என அவரது பெயரை சூட்ட வேண்டும் என்றும், அந்த சாலையின் பெயர்பலகையை மீண்டும் "சௌந்தரபாண்டியனார் அங்காடி சாலை" என குறிப்பிடவேண்டும் என்றும் தமிழக அரசிற்கு ஏற்கனவே இந்திய நாடார்கள் பேரமைப்பின் சார்பாக வைத்துள்ள வேண்டுகோள்களை நினைவுபடுத்தி அதை வலியுறுத்தினார். திராவிட இயக்க தலைவர்களை மதிக்கும் இந்திய அரசு இந்த கோரிக்கைகளை நிறைவேற்றும் என நம்புவதாகவும் தெரிவித்தார். நிர்வாகக்குழு. இந்திய நாடார்கள் பேரமைப்பு.




N.R.N.Group

போன்:044-26790587

**பிரியா டிப்போ**

**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.





விஜிபியின் 150வது திருவள்ளுவர் சிலையை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் திறந்து வைத்தார்.

விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 150ஆவது திருவள்ளுவர் சிலையை சென்னை சாய்ராம் கல்லூரி வளாகத்தில் தமிழக அரசு மாண்புமிகு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை அமைச்சர் உயர்திரு டாக்டர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் வி.ஜி.சந்தோசம், சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக செயல் அதிகாரி திரு.சாய் பிரகாஷ் லியோ முத்து விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளர் திரு.விஜிபி ராஜாதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.



தூத்துக்குடியில் வா.ஊ.சி.மார்கெட் அருகில் அமைந்துள்ள காமராஜர் சிலைக்கு.

2.10.2023 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. அமைச்சர் திருமதி.கீதாஜீவன் அவர்கள் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மூத்தகுடிமக்கள் சங்கம் துணைத் தலைவர் திரு.சக்திவேல் நாடார் அவர்கள் மற்றும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



சைதை நாடார் சங்கத்தின் ஆண்டு விழா வருகிற 5.11.23 அன்று அன்னை வேளாங்கண்ணி பள்ளி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிட தீர்மானிக்கப்பட்டது. விழா மலருக்கு செய்தி, விளம்பரங்கள், கட்டுரையும் அனுப்பி விழா மலர் சிறக்க வேண்டுகிறோம். இப்படிக்கு விழா குழுவினர் சைதை நாடார் சங்கம்.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!

### டாக்டர்.தேவ்ஆனந்த் அவர்கள்



17.10.2023 அன்று பிறந்த நாள் காணும் அன்னை வேளாங்கண்ணி பள்ளி கல்லூரி குழுமத்தின் செயலாளர் டாக்டர்.தேவ்ஆனந்த் அவர்களை வாழ்த்துகிறோம்.




ஒரு கோடி பனை விதைகள் நடும் மாபெரும் விழா

தமிழ்நாடு முழுவதும் 1.10.2023 அன்று காலை 10மணியளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு .சி.வெ.கணேசன்- தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாண்புமிகு.எர்ணாவூர் ஏ.நாராயணன் - தமிழ்நாடு அரசு பனைமரத் தொழிலாளர் நல வாரிய மாநில தலைவர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாநிலம் முழுவதும் ஒரு கோடி பனை விதைகள் நடும் விழா நடைபெற உள்ளது. இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இராமநாதபுரம் மாவட்ட நாடார் பேரவையின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டது. இவண்:கு.வேல்முருகன் மாவட்ட தலைவர் நாடார் பேரவை இராமநாதபுரம் மாவட்டம்.




காமராஜர் தினவிழாவில் நான்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ரூபி.மனோகரன் அவர்களுக்கு சிறந்த சமூக சேவையாளருக்கான விருது!

விழாவில் மாணவ-மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களை டாக்டர் ரூபி ஆர்.மனோகரன் எம்.எல்.ஏ, சீயோன் கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் என்.விஜயன் ஆகியோர் வழங்கினர்.



அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



**சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்**

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

**செல்வராஜ் சூப்பர் மார்கெட்**

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com

**ஜூலியன் காலண்டர்ஸ்**

உங்கள் வியாபார நிறுவனங்களை தினசரி காலண்டரில் விளம்பரம் செய்யுங்கள் நாங்கள் குறைந்த விலையில், குறிப்பிட்ட நேரத்தில் தயார் செய்து வினியோகம் செய்கிறோம். செல்:9382172884.

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133



**மருத்துவம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்திப் பெற்று விளங்கும் தைலம் 'கோபால ஆசான் காயத் திருமேனி எண்ணெய்' இதனைச் சிறு காயத்தில் தடவினால் போதும். அப்படியே காயம் காய்ந்துவிடும். இதன் விலை ரூ.25/- மட்டுமே. ஒரு பாட்டில் எண்ணெய் கொண்டு பல சிறு காயங்களை குணப்படுத்தி விடலாம். இது யாருக்கு தெரியப் போகிறது.

எனது மகன் முகிலனின் நண்பன் பெயர் சுந்தர். அவனுக்கு திடீரென்று வாந்தி, வயிற்றுவலி. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர், பரிசோதனை செய்து பார்த்து, "உடனே அப்பெண்டிஸ் ஆபரேஷன் செய்தாக வேண்டும்" என்று சொல்லி, படுக்கையில் சேர்க்கப்பட்டிருந்தார். ஒரு நாள் முழுவதும் படுக்கையிலிருந்து சிகிச்சை பெற்றார். அடுத்த நாள் மருத்துவ மனையிலிருந்து டிஸ்சார்ஜ் பண்ணிவிட்டார்கள். "மருத்துவச் செலவு எவ்வளவு?" என்று கேட்டேன். "25000 டாலர்" என்று சொன்னார். இந்திய ரூபாயின் மதிப்பில் ரூ.12,50,000/-.

வழுக்கைத் தலையில், முடி வளரச் செய்யும் மருந்தகம் இங்கு இருக்கிறது. "Hair Restoration Expert" என்று விளம்பரம் போட்டிருக்கிறார்கள். இது சான் அன்டோனியோவிலுள்ள கூப்நர் ரோட்டில் இருக்கிறது. இதனைப் பார்த்ததும் எனது தலையைத் தடவிப் பார்த்தேன். தலையின் பின்பக்கம் முடி இல்லை. "60 வயதைத் தாண்டிவிட்டது. இந்த வயதில் தலையில் முடி வளர்ந்தால் என்ன? வளராவிட்டால் என்ன?" என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

தோல் புற்றுநோய்க்குத் தனி சிகிச்சை மையம் இங்கு இருக்கிறது. இதுவும் சான் அன்டோனியோவில் எண் 9238-ல் செயல்படுகிறது. "FLOYD CURED DRIVE" என்ற மருத்துவ நிறுவனம் கூப்நர் ரோட்டில் உள்ளது. இங்கு பல சிறப்பு சிகிச்சைகள் அளிக்கிறார்கள்.

கண் மருத்துவமனைகளும், கை கால் முறிவு சிகிச்சை மையங்களும் இருக்கின்றன.

குழந்தைகளின் பல் பராமரிப்பு மையங்கள் அதிக அளவில் இருக்கின்றன. இது தனியாகச் செயல்பட்டு வருகிறது. இது மட்டுமின்றி, குடும்ப பல் மருத்துவ சிகிச்சை மையமும் இருக்கிறது.

"Cosmetics and Implant Dentistry" இந்த மையங்களும் இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.



'போதை மருந்துக்கு அடிமையானவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்' என்பதை இங்கு வந்துதான் அறிந்து கொண்டேன். அவர்களுக்கு புனர்வாழ்வு மையங்களும் இருக்கின்றன.

கூப்நர் ரோட்டில் 'Texas Centre for Athlets' என்ற பல அடுக்குமாடி மருத்துவமனை இருக்கிறது. "Physical Rehabilitiation Institute" என்ற நிறுவனம் இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற "Aurora Breast Cancer Centre" சான் அன்டோனியோவில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. Ambulatory Surgery Centre, Plastic Surgery Centre மற்றும் Flord Curl Dialyses Suit இருக்கிறது. இங்கு டயலிசிஸ்-ம் செய்து நோயாளிகளை அனுப்புகிறார்கள். இதுமட்டுமின்றி, மறதி நோய்க்கும், தூக்கமில்லாமையைக் குணப்படுத்தவும், தனித்தனி மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

தோல் நோய், வாதம் சம்பந்தமான நோய்களுக்குத் தனி மருத்துவமனைகள் இருக்கின்றன. குதிகால் மசாஜ் நிலையமும் உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 20 டாலர் வசூலிக்கின்றனர்.

"Leg and Ankle" சிகிச்சை மையம் இருக்கிறது. இது கூப்நர் ரோட்டில் 384-ல் சான் அன்டோனியோவில் செயல்பட்டு வருகிறது. இதன் அருகில்தான் ஓய்வு பெற்ற அரசு சிப்பந்திகளுக்கு என "Emerites" முதியோர் இல்லமும் செயல்பட்டு வருகிறது.

"Foundation Surgical Hospital" இருக்கிறது. இங்கு அறுவை சிகிச்சை மட்டும் செய்வர். இது சென்னை பொது மருத்துவமனையைப் போல காட்சியளிக்கிறது. இங்கு மருத்துவர்களுக்கு ஓய்வு அறை தனியாகக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். சோதனைக் கூடம் தனியாக இருக்கிறது. அறுவை சிகிச்சை செய்யப்படும் மருத்துவமனையாக செயல்பட்டுக் கொண்டு வந்தாலும் மருத்துவமனைக்குரிய எந்த அடையாளமும் இல்லாமல் இயங்குகிறது. மருத்துவமனையில் உள்ள குறைந்தபட்சம் பிளீச்சிங் பவுடர் வாசனையிலிருந்து எந்த வாசனையும் இங்கு இல்லை. கழிவுப் பொருட்கள் எதையும் காணோம்.

"TEXAS SPINE CELL" செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

"Dr. Research Drive" என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. இங்கு தீராத நோய்களைக் குணப்படுத்த ஆய்வுகள் நடத்தி, அதன்மூலம் சிகிச்சையளிக்கிறார்கள்.

"CHIROPACTIC Treatment Centre" இங்கு இருக்கிறது.

இங்கு, மூலம் சம்பந்தமான நோய், காசநோய், தொழுநோய் சிகிச்சை மையங்கள் இல்லை.

'AIDS' சிகிச்சை மையங்களும் இருக்கின்றன. HIV, AIDS தடுப்புத் திட்டங்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், ஒவ்வொரு நோய்க்கும் தனி சிகிச்சை மையங்கள், அதற்கென்று, சிறப்பாக படித்த மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள்.

இந்தியாவில், வீடு கட்டுவதற்கு வங்கிகளில் கடன் கொடுப்பது போன்று, இங்குள்ள வங்கிகளில் "Helping Building Hospital Scheme" ஒன்று செயல்படுகிறது. மருத்துவமனைகளில் கட்டுமான பணி நடைபெறுமிடங்களில் இந்த விளம்பரம் போட்டிருக்கிறார்கள்.

இங்கு சிகிச்சை அளிக்க அதிகமாகப் பணம் வசூல் செய்கிறார்கள். இதற்காக, மேற்படிப்பு படிக்க வரும் மாணவர்கள் படிப்பு முடிந்ததும், இங்கேயே தங்கி விடுகின்றனர். "கடந்த 3 ஆண்டுகளாக 3000 டாக்டர்கள் மேற்படிப்புக்காக இங்கு வந்துள்ளனர். ஆனால், யாரும் இந்தியாவிற்கு திரும்பவில்லை" என்பது செய்தி. மேலும், "மேற்படிப்பிற்காக செல்பவர்கள் படிப்பு முடிந்ததும் இந்தியாவிற்குத் திரும்பி வருவேன்" என்று Return Bond-களில் கையெழுத்து போட்டிருப்பதாகவும் செய்தி.

தமிழ் இலக்கியங்களில், பல மருந்து பற்றிய செய்தியை சொல்கின்றன. குறிப்பாக, திரிகடுகம் ஆசிரியர் "சுக்கு, மிளகு, திப்பிலி என்று மூன்று மருந்துகள் உடலிலுள் நோயை நீக்குவது போன்று திரிகடுகத்திலுள்ள கருத்துக்கள் மனிதனுடைய அறியாமையைப் போக்கி நல்வழி நடத்தும்" என்கிறார்.

இது மட்டுமின்றி, 'ஏலாதி' என்ற நூலில் 6 வகையான மருந்துகளைச் சொல்லி அந்த மருந்துக் கலவையைச் சாப்பிட்டால் உடலிலுள்ள நோயை அகற்றும். அதே போன்று 6 நல்ல கருத்துக்களைச் சொல்லி, அதனைப் பின்பற்றினால் நல்வழியில் நடக்கலாமெனக் கூறப்பட்டிருக்கிறது. இங்கு பலவிதமான சிறப்பு மருந்தகங்களைப் பார்த்தோம், தமிழ் இலக்கியத்தை நினைத்துப் பார்த்தேன்.

நல்ல மனைவி, நல்ல கணவன், நல்ல பிள்ளை, நல்ல அரசன், நல்ல குடி, நல்ல நண்பன் எப்படி இருக்க வேண்டுமென இலக்கணம் கூறிய திருவள்ளுவர், 'நல்ல டாக்டர் எப்படி இருக்க வேண்டும்?' எனவும் கூறியுள்ளார்.

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று கூறுகிறார். (தொடரும்)

# விழித்தெழு! இளைஞனே விழித்தெழு!
## (தோல்வி பயம் Suicide)

பள்ளி மற்றும் கல்லூரி உலகிலிருந்து பல வண்ண கனவுகளுடன் வெளி உலகில் காலடி எடுத்து வைக்கும் இளைஞர்களுக்கு என் பொன்னான வணக்கங்கள்.



வெளி உலகிற்கு வந்த இளைஞர்கள் அனைவருக்கும் பொதுவாக எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை இருக்கும். அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறது என்ற கேள்வி எழும். சிலர் செல்வந்தனாக வேண்டும் என்றும், சிலர் மனதிற்கு பிடித்த துறையில் புகழ் பெற வேண்டும் என்றும், சிலர் சமூக சேவைகள் செய்ய வேண்டும் என்றும், வெகு சிலர் கிடைத்த வேலைகளை செய்தாலே போதும் என்ற எண்ணத்தில் இருப்பர். மற்றும் சிலர் படிக்கும் போது பெற்றோர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்து கொடுத்தனர் ஆனால் படித்து முடித்தவுடன் தனக்கு தேவையானவற்றைத் தானே சம்பாதிக்க வேண்டும், குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற பயத்தில் இருப்பர். இந்த பயத்தால் அவர்களுக்கு பதற்றமும் மன அழுத்தமும் கூடவே இருக்கும்.

நாம் பிறப்பதற்கு முன்பே நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் இந்த உலகத்தில் படைக்கப்பட்டு விட்டது. பிறந்த குழந்தைக்காக தாய்ப்பால் சுரப்பதே இதற்கு ஒரு நல்ல உதாரணம். இந்த ஒரு உயரிய உதாரணத்தை நினைவில் கொண்டோமானால் நமக்கு நம்பிக்கை பிறந்துவிடும். நம்பிக்கை இருக்கும் இடத்தில் பயத்திற்கு இடம் இருக்காது.

ஆரம்ப வகுப்பில் படிக்கும் காலத்தில், ஆசிரியர்கள் நமக்கு அடிப்படைக் கல்வியைக் கற்றுக் கொடுத்தனர். நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட அந்த கல்வி நமக்கு புரிந்ததா? என்று தெரிந்து கொள்வதற்காக அந்தந்த பாடத்தில் சோதனை (பரீட்சை) செய்யப்பட்டு, மாணவர்கள் பரீட்சையில் எடுக்கும் மதிப்பெண்களை வைத்து மாணவர்களின் அறிவாற்றல் மதிப்பிடப்பட்டன. மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் தரவரிசைப்படுத்தப்பட்டு, அவரவர்களுக்குத் தேவையான கல்வியை சிறப்பு கவனம் செலுத்தி அனைத்து மாணவர்களையும் ஒரே தர வரிசையில் மேலான மாணவர்களாக ஆசிரியர்கள் உருவாக்கினர். மாணவர்கள் எந்த பாடத்தில் ஆர்வமாக உள்ளனர் என்றும் அவர்களுக்கு வேறு எந்த துறையில் ஆர்வம் உள்ளது என்பதை கண்டுபிடித்து ஆசிரியர்கள் அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் நம்பிக்கையை வளர்த்தனர். இந்த வகையிலான சோதனை பெரும்பாலும் நேர்மறையான விளைவுகளை மட்டுமே உருவாக்கின.

ஆனால் உயர்நிலை வகுப்பிற்கு வந்த பின்பு பரீட்சைகளும் மதிப்பெண்களும் மாணவர்களிடையே பயத்தை ஏற்படுத்துகின்றன. அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மதிப்பெண்கள் மட்டுமே முக்கியம் என்று நினைக்க ஆரம்பித்துவிடுகின்றனர். நிறைய மதிப்பெண்களை வாங்கினால் தான் அடுத்தடுத்த வகுப்பிற்கு முன்னேறி கல்லூரியில் படித்து பின்னர் நல்ல மதிப்புமிக்க வேலையில் சேர்ந்து நிறைய பணம் ஈட்ட முடியும் என்று நினைக்கின்றனர். இதுவே இறுதி வெற்றி என்றும் நினைக்கின்றனர். இந்த இடைப்பட்ட காலத்தில் அன்பு, அமைதி, திருப்தி, ஆனந்தம் என்று பல உணர்வுகள் இருப்பதையும் அவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதையும் மறந்து விடுகின்றனர்.

ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனி திறமைகள் இருக்கும். அந்த திறமைகளை அவர்களும் அவர்களின் பெற்றோர்களும் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஒருவர் தமிழில் கதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் மிக்கவராக இருப்பார், அதே நேரத்தில் ஆங்கில மொழி பயிலுவதற்கு அவர் சிறிது சிரமப்படுவார். இன்னொருவர் கணக்கு பாடத்தில் ஆர்வம் குறைந்து காணப்படுவார், ஆனால் புவியியல் பாடத்தில் புலி போல் இருப்பார். முதலாவது நபரை ஆங்கிலம் படிக்க வலியுறுத்துவதும், இரண்டாவது நபரை கணக்கில் 100 சதவீத மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதும் அவர்களை அவநம்பிக்கையடையச் செய்யும். அதனால் தோல்வி பயம் ஏற்பட்டு அவர்களுக்கு இயல்பாக இருக்கும் நேர்மறையான எண்ணங்கள் எதிர்மறையான எண்ணங்களாக மாற்றம் பெறும், சிலருக்கு இந்த உலக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கும். இந்த வகை எதிர்மறையான எண்ணங்களை தவிர்த்து வளமான வாழ்க்கை வாழ ஏராளமான வழிகள் உள்ளன. அவற்றுள் இருவழிகளை மட்டும் இங்கே காணலாம்.

மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் அவரவர் இலக்கினை அடைவதற்கு தனித்தனிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. ஒருவரின் பாதையில் மற்றொருவர் நடக்க முடியாது. வேண்டுமென்றால் அதை ஒரு வழிகாட்டி பாதையாக எடுத்துக் கொண்டு அவரின் பாதையை அவரே அமைத்துக் கொள்ளலாம். இந்த தனிப் பாதையைப் பற்றி புரிந்து கொண்டால் வாழ்க்கையில் வெற்றி - தோல்வி என்ற பேச்சிற்கே இடம் இருக்காது. மேலே குறிப்பிட்டவாறு ஒவ்வொருவருக்கும் ஒரு செயலில் நாட்டமும் ஆர்வமும் இருக்கும். அதைத் தெரிந்து கொண்டு அந்த செயலையே மேம்படுத்தி செய்யும் போது நாம் எப்பொழுதும் நிகழ்காலத்தில் இருக்க முடியும். ஒவ்வொரு நிமிடமும் நிகழ்காலத்தில் இருப்பதால் எதிர்காலத்தைப் பற்றிய பயம் இருக்காது. நம்பிக்கை ஏற்படும். நாம் அதிக ஈடுபாட்டுடன் அதிக கவனத்துடனும் அந்த செயலை செய்து, எளிதாக இலக்கை அடைய முடியும். செல்லும் பாதை எளிதாக இருக்கும் போது நம் மனம் அமைதியாக இருக்கும், செய்த செயலில் திருப்தியும் அடையும்.

ஒருவருக்கு ஒரு துறையில் ஆர்வம் இல்லையென்றாலோ, ஒரு துறையில் வேலை செய்வது கடினமாக இருந்தாலோ அல்லது அந்த துறையில் அவரால் தன் முழு ஆக்கத்திறனை காட்ட முடியவில்லை என்றாலோ அது அவருக்கான துறையில்லை என்பதை புரிந்து கொண்டு அவருக்கு பிடித்த வேறு துறையை தேர்ந்தெடுத்து அதில் தன்னுடைய திறனை காட்டவேண்டும். இப்படி செய்யும் போது மனதிற்கு பிடித்த வேலையை எளிதில் சிரமமில்லாமல் செய்வதுடன் அதன் வழியாக பொருளும் ஈட்டலாம். இதன் விளைவாக அமைதியான வாழ்க்கை வாழ்வதுடன் நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் நம்மால் ஆன உதவிகளையும் செய்யலாம்.

நம் அனைவருக்கும் இந்த பூமியில் எதற்காக படைக்கப்பட்டோம் என்ற கேள்விக்கு பதில் தெரிந்துவிட்டால் நம் சிந்தனை எப்போதும் அதனை ஒட்டியே தெளிந்த நீரோடை போல இருக்கும். இதை தெரிந்து கொள்வதற்கு ஜப்பானிய சொல்லான "இகிகை" (தமிழில் "வாழ்க்கையின் மதிப்பு") என்ற கருத்து உள்ளது. இதில் நான்கு அடிப்படை கேள்விகள் இருக்கும். இந்த நான்கு கேள்விகளுக்குமான ஒரே பதில் தான் நாம் இந்த உலகத்தில் படைக்கப்பட்டதற்கான காரணமாகும். இந்த நான்கு கேள்விகள் பின்வருமாறு:

1.நாம் என்ன செயலை செய்ய விரும்புகிறோம்?

2.நாம் அந்த செயலில் வல்லவரா?

3.நாம் விரும்பும் அந்த செயலால் உலகத்திற்குத் தேவையானதை செய்ய முடியுமா?

4.நாம் விரும்பும் அந்த செயலால் பொருள் ஈட்ட முடியுமா?

'Ikigai: The Japanese Secret to a Joyful Life' என்ற ஆங்கில புத்தகத்தின் ஆசிரியர்களான ஹெக்டர் கார்சியா மற்றும் பிரான்செஸ்கோ மிரல்லெஸ் என்பவர்களின் கூற்றுப்படி இகிகை என்பது ஆரோக்கியமான உடலுடனும் மனதுடனும் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்துவதற்கான ஒரு திறவுகோலாகும்.

இந்த நான்கு கேள்விகளுக்குமான பதிலாகக் கிடைத்த செயலை செய்வதற்காகத் தான் நாம் இந்த உலகத்தில் வாழ்கின்றோம். இதைப் புரிந்து கொண்டு வாழ்க்கையை உற்சாகமாக ஆனந்தமாக வாழ்வோம்.

இதை தெரிந்து கொள்வதற்கு சில காலம் கடந்தாலும், நாம் பொறுமையாக இருந்து இதைக் கண்டுபிடிக்க வேண்டும் வளமான நலமான வாழ்க்கை வாழ்வதற்காக.

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn. Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**

# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர்
உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை,
கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia,
Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள
இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost)
BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில்
அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம்,
17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான
திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.
திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

**கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073**

**Cell : 73388 12126, 73977 76595**

**E-mail : tamilagamatrimony2005@gmail.com**

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

## 6.இங்கிலாந்து சுற்றுலா

மீண்டும் லண்டன்: இன்னொரு முறை பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது மீண்டும் இங்கிலாந்து சென்றோம். மறுநாள் எலிசபெத்தின் கணவரின் சொந்த ஊரான எடின்பரோ நோக்கிச் சென்றோம். வழி நெடுக இயற்கை அழகு கண்ணை கவர்ந்தது. ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கின. தூய்மையான ஊர். இது ஸ்காட்லாந்து நாட்டின் தலைநகர். விஞ்ஞானிகள் பலரும் பிறந்த ஊர். கேஸ் பெட்ரோமாக்ஸ் லைட்டைக் கண்டுபிடித்த ஸ்டீபன்சன் வீட்டையும் பார்த்தோம். புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். குளிர் அதிகம். மழையும் பெய்து கொண்டிருந்தது. எடின்பரோவில் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக பிரம்மாண்டான அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது.

இப்போது பக்கிங்காம் அரண்மனையைப் பார்த்தோம். அங்கிருந்து திருவாரூரில் இருந்த என் அத்தை சாரதாவிடம் பேசினேன். பிரம்மாண்டமான, அழகான அரண்மனை. வேலைப்பாடுகள் மிகுந்த வாசல் கதவுகள் காண்போரைக் கவர்ந்து ஈர்த்தன. மகாராணி குடும்பத்தினரின் பிரம்மாண்டமான ஓவியங்கள் (புகைப்படங்களாக) வரிசையாகக் காணப்பட்டன. அரண்மனையின் அழகு மனத்தில் ஆழப் பதிந்தது. ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரான கிராப்போர்டு அவோனில் அவர் பிறந்த வீட்டை சுற்றிப் பார்த்தோம். ஷேக்ஸ்பிரியரின் நினைவாக உலக புத்தகத் தினமாக உலகம் முழுவதும் மக்கள் கொண்டாடுகின்றனர்.




இப்பகுதியில் இருந்த அனைத்து வீடுகளும் பூச்செடிகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னர் யார்க் பகுதியில் அமைந்துள்ள மிகப் பிரம்மாண்டமான வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தைக் கண்டோம். அது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில். இங்கே புகழ் பெற்ற மத குருமார்கள், அரசு குடும்பத்தினர் அடக்கம் செய்யப்பட்டு அவர்களைப் பற்றிய குறிப்புகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. மாலையில் ஹோட்டலுக்குத் திரும்பினோம். இந்த சுற்றுப் பயணத்தில் லண்டனில் படித்துக் கொண்டிருந்த எங்கள் மகன் ராஜாராம் கலந்து கொண்டது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மறுநாள் 12 மணிக்கு மேல் கிளம்பி மான் செஸ்டர் என்ற ஊரில் உள்ள கோட்டையைப் பார்த்தோம். பின்னர் வைக்கிங் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் மான்செஸ்டர் நோக்கி எங்கள் டூர் ஆரம்பமானது. மலைகள், புல்வெளிகள், ஆட்டு மந்தைகளைப் பார்த்துக் கொண்டே செஸ்டன் எனும் பகுதிக்கு வந்தோம் பீங்கான் செய்யும் தொழிற்சாலையை உள்ளே சென்று பார்த்தோம்.

லண்டன் வந்து சேர்ந்ததும் இரவில் டாக்டர் பி.கே.எஸ். அவர்களின் மகன் டாக்டர் பார்த்திபன் இல்லத்தில் தங்கினோம். மறுநாள் லண்டன் ஏர்போர்ட் வந்தோம். மதியம் 2மணிக்கு அமெரிக்கா செல்லும் விமானம் கிளம்பியது. 7மணி நேரம் பயணத்திற்குப் பின் நியூயார்க் (அமெரிக்கா) கென்னடி ஏர்போர்ட் வந்து சேர்ந்தோம்.

ஒரு வழியாக ஐரோப்பா, இங்கிலாந்து சுற்றுப் பயணம் முடிந்து இனி அமெரிக்கா சுற்றுலா ஆரம்பமானது.

7.அமெரிக்கா: ஓர் இனிய அனுபவம்:

நியூயார்க் வந்து சேர்ந்த போது, எங்களை அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை. டாக்டர் கணேசன் அவரது இல்லத்தில் தங்குவதாக ஏற்பாடு செய்து இருந்தோம். மூன்று மணி நேரம் காத்திருந்த பின் நண்பர் கணேசன் அவர்களுக்கு போன் செய்தோம். அவர் கூறியபடி நியூயார்க்கில் உள்ள ஹாலிடே இன் என்ற ஹோட்டலில் தங்கினோம். பின்னர் ஹோட்டல் வந்த பிறகு வேறு சில நண்பர்களை போனில் அழைத்தேன். டாக்டர் பி.கே.சீனிவாசனின் இளைய மகன் டாக்டர் முரளியின் தொடர்பு கிடைத்தது. டாக்டர் பி.கே.சீனிவாசனின் சம்மந்தி டாக்டர் சேகர், அவரது பிள்ளை சிவா ஆகியோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. நியூயார்க் நேரப்படி காலை 8மணிக்கு ஹோட்டலுக்கு வருவதாக சேகர் கூறினார்.

நியூர்யார்க் சிட்டி டூர்:-

நாங்கள் அதற்குள் சிட்டி டூர் ஏற்பாடு செய்து கொண்டு நியூயார்க்கை பார்க்கப் புறப்பட்டோம். முதலில் ஐ.நா.சபையைச் சென்று பார்த்தோம். மிகவும் பிரம்மாண்டமானதாகவும் தூய்மையாகவும் இருந்தது. அங்கே தமிழில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது, எங்களுக்கு மகிழ்ச்சியை தந்தது. நிறைய மாணவர்கள் வந்திருந்தனர். அங்கு ஒரு பெரிய பென்டுலம் ஆடிக் கொண்டிருந்தது.

உலகின் மிகப் பெரும் பணக்காரராகத் திகழ்ந்த ராக் பெல்லரின் மாளிகையைப் பார்த்தோம். மத்திய நியூயார்க்கில் எங்கு பார்த்தாலும் பிரம்மாண்டமான கட்டடங்கள் இருந்தன. இப்பகுதியில் ஐரோப்பா போன்று தூய்மை எங்கும் காணப்படவில்லை. பெர்ரியில் (பெரிய படகு) ஏறி சுதந்திர தேவி சிலையைப் பார்த்தோம். நியூயார்க்கில் 85வது மாடியில் நின்று நியூயார்க்கைப் பார்த்தோம். 102 மாடி வரை உள்ளது அந்த எம்பயர் பில்டிங். ஹட்சன் என்ற ஆறு கடல் போல பிரம்மாண்டமாக ஓடிக் கொண்டிருந்தது. - தொடரும்........




ஜெயம் ரியல் எஸ்டேட்&
ஜெயம் ஸ்வீட் ஸ்டால்

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.

கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473

கே.கே.நகர். எஸ்.தேவதாஸ் செயல் தலைவர்.

நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

## நாடார்களின் பிரிவுகள்

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.



8). நாவிதர்கள்.:

நாடார்களுக்கு முழுமையாகப் பணிபுரியும் நாவிதர்கள் நாடார் சமூகத்தில் உண்மையான அங்கத்தினராக இருந்து வந்தனரா? அல்லது ஒருகிளை சாதியினராக இருந்து வந்தனரா? என்று தெளிவாகத் தெரியவில்லை. நாடார் சமூகத்திற்குத் தொண்டு செய்யும் நாவிதர்கள் தங்களுடைய சாதாரணப் பணியோடு மக்களைக் கூவி அழைப்பவராகவும், செய்தியைக் கொண்டு செல்பவராகவும், நாடார் குடும்பத்தில் நிகழும் துக்க செய்திகளை பிற நாடார் மக்களுக்கு அறிவிப்பவராகவும் பணி செய்து வந்தனர்.

தாழ்ந்த நிலையில் இருப்பதைக் காட்டிலும், உயர்ந்த நிலையில் இருப்பதை சுட்டிக் காட்டியே நாவிதர்கள், நாடார்களுக்கு தொண்டு செய்து வந்துள்ளனர். நாடார்கள், தங்களுக்கு தொண்டு செய்யும் இந்த நாவிதர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வது கிடையாது.

பாண்டியர்களின் முன்னோர்கள், தங்கள் நாடு நாயக்கர் வசமான போது நாவிதர்களையும் தங்களோடு அழைத்துக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

9). கிராமணி:-

கிராமணி என்றால் கிராமத்தை ஆள்பவர் என பொருள் தரும். இது சமஸ்கிருதச் சொல். "சான்றோர் மரபு காத்தல்" என்ற நூலில் தொண்டை வளநாட்டுச் சான்றோர் குலத்தவர்களுக்கு "கிராமணிகள்" என்ற பட்டப் பெயர் இருந்தது தெரிகிறது. நாடார்களும் கிராமணிகளும் நாடார் சமூகத்தின் உட்பிரிவினர் என்று சிலர் கருதினார்கள். ஆங்கிலேயர்களும் அவ்வாறே கருதினர். ஆனால் கிராமணி ஒரு தனி வகுப்பாகவே காணப்பட்டனர். பரம்பரையாக தென்னை மரம் ஏறும் தொழிலாளிகளாக இருந்த இவர்கள், மது விலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டபோது பொருளாதார ரீதியில் இடம் பெயர்ந்தனர்.

கிராமணி சமூகத்தினர் பெரும்பாலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் வசித்து வந்தனர். இவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளனர். கிராமணிகள் பெண்கொடுத்து நாடார்களுடன் உற கொண்டதும் கிடையாது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் நாடார்களும், கிராமணிகளும் நாடார்களின் பட்டியலில் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளனர். இன்று பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கல்விக்காக வழங்கும் உதவித்தொகை பெறுவதற்கான நாடார்களின் பட்டியலில் இணைக்கப்பட்டு உள்ளனர்.

10) நாடான்கள்:- நாடான்கள் குறித்து அகராதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்கள்:-

1.நாடான் -A Polite epithet in thd south > applied to thd shaanars. (Rev.J.P.Rottler, Tamila English Dictionary, 1834) நாடான் என்பது சாணாருக்குரிய பட்டப்பெயர்.

2) NADAVAN (நாடாவான்)- A head of Chandrars Dr.Gundart, Malayalam English Dictionary.

3). "Nadan is a rular of Nadu or district> it is thd usual of the souther chandrans - Census of India> 1891 Vol XIII P." நாடான் என்பவன் ஒரு நாட்டை அல்லது ஒரு பகுதியை ஆள்பவன், இது தென்னக சான்றாவணங்களின் வழக்கமான பட்டமாக உள்ளது என கலெக்டர் H.W.Stuawart எழுதியுள்ளார்.

- தொடரும்..........






திருச்சியில் விஜிபி ஹவுசிங் புதிய கிளை திருச்சி மாநகரில் விஜிபி குழுமத்தின் தலைவர் விஜிசந்தோசம் அவர்கள் திறந்து வைத்தார்கள். அவர்களோடு விஜிபி ராஜா தாஸ், விஜிபி பாபு தாஸ் ஆகியோர் உள்ளனர்.

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

***இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை***

## 26.வாந்தி, பேதியா? உஷார்!

-டாக்டர் பி.சௌந்தரராஜன்.



தற்காலிக சிறுநீரகச் செயலிழப்பு வேறு பல சமயங்களிலும் ஏற்படும்.

அதிகமான வாந்தி - பேதியின்போது, விபத்தின்போது, ஆபரேஷன் தருணங்களில், கர்ப்ப மற்றும் பிரசவ நேரங்களில், சிலவகை விஷக்கடிகளின்போது, சிலவகை தற்கொலை முயற்சிகளின்போது, வெகு சில வகையான ஒவ்வாமையின்போது. இந்தச் சமயங்களில் என்ன செய்யவேண்டும் என்று தெரிந்திருந்தால் சிறுநீரகத்தையும் ஏன்.. உயிரையும் கூடக் காப்பாற்ற முடியும்.

காந்தியடிகளின் அறிவுறுத்தலை ஏற்று குமரி அனந்தனின் தந்தை கதர்ப் பணியை மேற்கொண்ட போது சிறுவனான குமரி அனந்தன் இராட்டை நூற்கும் பெண்மணிகளிடம் போய் நூல் வாங்கி வந்து தந்தைக்கு கொடுப்பதில் ஆர்வம் காட்டினார். சுசீந்திரம் கோயில் தேரில் விடுதலை வீரர்கள் தேசியக் கொடியை ஏற்றிய போது விடுதலை முழக்கமிட்ட மாணவர்களில் குமரி அனந்தனும் ஒருவர். அப்போது அங்கு நடந்த போலீஸ் சுழல் துப்பாக்கிச் சூட்டிலிருந்து குமரி அனந்தன் தப்பியதே அதிசயம்.

- தொடரும்...

# அருமை அண்ணாச்சி



கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

**பிரிந்தவர்கள் கூடினோம்:**

அண்ணியைக் காண்பதற்காகக் சென்னை சென்ற அருமை அண்ணாச்சி, அங்கு சென்று விசாரித்துள்ளார்கள். அண்ணாச்சியின் நினைவால் அண்ணி வாடிக்கொண்டிருப்பதையும் அவர் மனநிலையை மாற்றுவதற்கு வீட்டில் செய்த முயற்சிகள் பயன் தரவில்லை என்பதையும் முதலில் தெரிந்து கொண்டார். அண்ணியின் மனத்தை எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாது என்பதையும், எவராலும் தங்களைப் பிரிக்க முடியாது என்பதையும் அண்ணாச்சி உறுதியாக நம்பினார். தன்னைக் காண்பதற்காகத் தன் அன்பு மனைவி துடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தபோது உடனடியாக அவரைப் பார்க்க விரும்பினார் அண்ணாச்சி,

என்ன நடந்தாலும் சரியென்ற துணிவுடன் நேராக அண்ணியின் வீட்டிற்குச் சென்று அண்ணியைப் பற்றி விசாரித்தார். அவர் எதிர்பார்த்தது போலவே அங்கு சரியான பதில் கிடைக்காததுடன் அவமானப்படுத்தும் விதத்திலேயே அங்கு நடந்து கொண்டார்கள். அதைப் பற்றியெல்லாம் அண்ணாச்சி சிறிதும் கவலைப்படவில்லை. அவருக்கு வேண்டியது அண்ணிதானே! அண்ணியை மீண்டும் அடைவதற்காக எந்தத் துன்பத்தையும் ஏற்றுக் கொள்ள அப்போது அவர் தயாராய் இருந்தார்.

என் மனவியை நான் பார்க்க வேண்டும் என்று உரிமையோடு கேட்டார் அண்ணாச்சி. அந்த உரிமைக் குரல் அண்ணியின் வீட்டாருக்கு ஆத்திரத்தை அதிகரிக்கவேண்டும். அண்ணியைப் பற்றிய எந்த விபரத்தையும் கூற முடியாது என்று ஆணவத்துடன் கூறி அண்ணாச்சியை ஏமாற்றத்துடன் திரும்ப வைத்துவிட்டனர். ஆனால் எப்படியும் அண்ணி இருக்கும் இடத்தைத் தெரியாமல் விடுவதில்லை என்ற உறுதியோடு அங்கிருந்து புறப்பட்டார் அண்ணாச்சி.



நர்ஸ் பயிற்சியில் அண்ணி சேர்க்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டு நேராக அங்கு சென்றார் அண்ணாச்சி. அண்ணாச்சி அங்கு சென்ற சமயத்தில் ஏதோ ஒரு அறுவைச்சிகிச்சையைப் பார்த்த அதிர்ச்சியில் அண்ணி மயக்கமடைந்த நிலையில் இருந்திருக்கிறார். ஆவலுடன் காணச் சென்ற தம் அன்பு மனைவி மயங்கிய நிலையில் இருப்பதைப் பார்த்துக் கண் கலங்கினார் அண்ணாச்சி. உணர்ச்சி மேலிட அண்ணியாரை அன்புடன் அழைத்திருக்கிறார். உயிர் பிரியும் தருவாயில் இருந்த ஒருவனுக்குத் தரப்பட்ட மருந்து போல் அண்ணாச்சியின் குரல் அண்ணியின் காதுகளில் அப்போது எதிரொலித்திருக்கவேண்டும், ஆவலுடன் கண் விழித்துப் பார்த்திருக்கிறார். எதிரில் கலங்கிய கண்களுடனும் கனிவான பார்வையுடனும் அண்ணாச்சி நின்றிருந்தார்.

இழந்த செல்வத்தை மீண்டும் எய்தியது போன்ற மன நிலையை இருவரும் எய்தினார்கள். இப்போது இவர்கள் யாருக்கும் அஞ்சும் நிலையில் இல்லை. உலகமே எதிர்த்தாலும் ஒன்றாகத்தான் வாழ்வது என்ற உறுதியுடன் அங்கிருந்து புறப்பட்டனர். முன்பு போல் வீட்டிற்குத் தெரியாமல் புறப்பட இப்போது அவர்கள் விரும்பவில்லை. நேராக அண்ணியின் வீட்டிற்குச் சென்றார்கள். அந்த நிலையில் அவர்கள் இருவரையும் பார்த்து வீட்டிலுள்ள அனைவருமே அதிர்ச்சியடைந்தனர்.



அவர்களது அதிர்ச்சியையோ, ஆத்திரத்தையோ இவர்கள் பொருட்படுத்தவில்லை. என்னவாயினும் இனிச் சேர்ந்தே வாழ்வது என்ற உறுதியுடன் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். "நான் என் மனைவியை அழைத்துக் கொண்டு செல்கிறேன்" என்று அனைவர் முன்னிலையிலும் கம்பீரமாகக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றார் அண்ணாச்சி. இராமபிரானைத் தொடர்ந்து நடந்த சீதா தேவியைப்போல் அண்ணாச்சியின் அடியைப் பின்பற்றி நடந்தார் அண்ணி. அவர்களது மன உறுதிப்பாட்டைக் கண்டு எவராலும் எதையுமே அங்கு பேச முடியவில்லை.

அண்ணியை அடைந்தாயிற்று. அடுத்து வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டார் அண்ணாச்சி. முன்பு தான் மட்டும் தனியாக இருந்ததால் எப்படியாவது நாட்களைக் கடத்த முடிந்தது. இனிமேல் அப்படியிருக்க முடியுமா? அதுவும் பெற்றோரைப் பகைத்துக் கொண்டு தன்னையே கதியென்று நம்பிவந்த பெண்ணை எவ்விதக் குறையும் இல்லாமல் பாதுகாக்கவேண்டும் அல்லவா?

ஏற்கெனவே ரேஷன் கடையில் வேலை பார்த்த அனுபவம் அண்ணாச்சிக்கு இருந்ததால், அதே வேலை எங்கும் கிடைக்குமா என்று முயற்சி செய்தார். அவர் முயற்சி பயன் தந்தது. சூளையில் ராஜாபாதர் என்பவர் நடத்திய ரேஷன் கடையில் உடனேயே அண்ணாச்சிக்கு வேலை கிடைத்தது. மேற்கு மாம்பலத்தில் உள்ள ஈஸ்வரன் கோயில் தெருவில் தான் அப்போது வீடு வாடகைக்குப் பிடித்திருந்தார்கள். இடையில் ஏற்பட்ட சோதனைகளை, அண்ணாச்சி அவர்கள் உறுதியுடன் இருந்து சாதனையாக்கிவிட்டார். மீண்டும் அவர்கள் இதயங்களில் இன்பராகம் எதிரொலிக்கத் தொடங்கியது.

அண்ணியை மீண்டும் அடைந்துவிட்ட செய்தியை அருமை அம்மாவிற்குக் கடிதம் மூலம் எழுதியிருந்தார் அண்ணாச்சி. இழந்த செல்வத்தை மீண்டும் எய்திவிட்டது போன்ற மகிழ்ச்சியில் நாங்கள் துள்ளிக் குதித்தோம். அந்தச் சமயத்தில் தான் மலேசியாவிலிருந்து அப்பா கடிதம் எழுதியிருந்தார்கள் அண்ணாச்சிக்கு. விரைவில் சென்னைக்கு வரப்போவதாக. அப்பா எழுதியிருந்தார்கள் அண்ணாச்சிக்கு. அப்பா எழுதியிருப்பது கண்டு அண்ணாச்சி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அப்பா சென்னை வருவதால் கிராமத்திலிருக்கும் நாங்களும் சென்னைக்கு வந்து விடுவது தான் நல்லது என்று நினைத்தார் அண்ணாச்சி.

- தொடரும்..........

# ஸ்ரீ ராகு கேது பெயர்ச்சி பலன்கள் -8.10.23

-அருட்பணிசெம்மல் S.V.சிவசம்பந்த நாடார்,
தஞ்சை(வ) மாவட்ட அவைத்தலைவர்,
பெருந்தலைவர் மக்கள் கட்சி,
கும்பகோணம், 9245344808.

மேஷம்:12ல் ராகு 6ல் கேது:நன்மைகள் நடக்க கூடியதாக அமையும். நோய்நொடி, கடன் பிரச்சனை, எதிரிகளால் பிரச்சனை, கணவன்-மனைவி பிரச்சனை நீங்கும். மனதில் தெளிவும் தன்னம்பிக்கையும் தைரியமும் பிறக்கும். சுறுசுறுப்பாக செயல்பட்டு பலரிடம் பாராட்டு கிடைக்ககூடிய சூழல் உருவாகும். தொழிலில் நல்ல முன்னேற்றமும் லாபமும் ஏற்படும். படிக்கும் மாணவர்களுக்கு மந்தநிலை நீங்கி நல்ல முன்னேற்றம் ஏற்படும். மேலும் 12ல் உள்ள ராகு சில இழப்புகளையும் கொடுப்பார். எச்சரிக்கை தேவை.

ரிஷபம்: 11ல் ராகு 5ல் கேது: தங்களுக்கு பல வழிகளில் பல நன்மைகள் கிடைக்கும் எடுத்த காரியங்களில் வெற்றி திடீர்யோகம், அதிர்ஷ்ட வாய்ப்புகள், பூர்வீக சொத்து, கோர்ட்டு வழக்குகளில் வெற்றி, என லாபஸ்தானத்தில் உள்ள ராகு பகவான் வழங்குவார். 5ல் உள்ள கேது பகவானாலும் பொன்பொருள் சேர்க்கை, நிலம், வீடு, வாகனம் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் தங்களது படிப்பில் அதிக கவனம் செலுத்தினால் தான் நினைத்த இலக்கை அடையலாம்.

மிதுனம்: 10ல் ராகு 4ல் கேது.: தங்களுக்கு பலவிதமான துன்பங்களை கொடுக்ககூடியதாகவே அமைந்துள்ளது தோல்வி, நஷ்டம், பயம் குழப்பம், பகை, நோய்நொடி, கடன், விபத்து, பொன்பொருள் இழப்பு, எதிரிகள் தொல்லை ஏற்படும். பதவி இழப்பு, விரும்பாத இடமாற்றம். மேலதிகாரிகளால் தொல்லை ஏற்படும். சில பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் மந்தநிலை ஏற்படும். எச்சரிக்கையுடன் நடந்து கொள்வதே நல்லது.

கடகம்: 9ல் ராகு 3ல் கேது:- ஓரளவிற்கு நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தொழிலில் லாபம். பொன்பொருள் சேர்க்கை ஏற்படும் தந்தைக்கு உடல்நலக்குறைவு, தந்தையுடன் பகை போன்றநிலை உருவாகும். கவலைப்பட தேவையில்லை. கேது பகவானால் அனைத்துப் பிரச்சனைகளையும் ஓரளவிற்கு சிரமமின்றி சமாளித்துவிடலாம்.

சிம்மம்: 8ல் ராகு 2ல் கேது: 8ம் இடத்தில் ராகுவும், 2ம் இடத்தில் கேதுவும் அமர்ந்து இருப்பது மிகுந்த துயரத்தை அடையக் கூடியதாகவே அமைந்துள்ளது. தேவையில்லாத பிரச்சனை, எதிர்பாரா விபத்து, விஷகெண்டம், வம்பு வழக்கு ஏற்படலாம். 2ல் உள்ள கேதுவால் குடும்பத்தில் குழப்பம், பணவரவு தடைபடுதல், வீண் செலவு ஏற்படுதல், நோய்நொடிகளால் தொல்லை, நண்பர்களால் தொல்லை, போன்ற நிலை உருவாகலாம். பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானத்தில் ராகு இருப்பதால் கணவரின் உடல்நிலை மிகவும் மோசமான சூழல் உருவாகலாம். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் செலுத்த முடியாமல் போகும். எச்சரிக்கையுடன் நடப்பதே நல்லது.

கன்னி:7ல் ராகு, 1ல் கேது: 7ல் ராகு சஞ்சரிப்பதும் ஜென்ம ராசியில் கேது சஞ்சரிப்பதும் துன்பங்களையே ஏற்படுத்தும். எதிலும் தோல்வி, நஷ்டம், கணவன் மனைவி பிரிவு, மன உளைச்சல், கடன்தொல்லை, எதிரிகளால் தொல்லை ஏற்படும். நண்பர்கள், பங்குதாரர்கள் துரோகிகளாக மாறுவர். மாணவர்களுக்கு படிப்பில் மந்தநிலை ஏற்பட்டு எதிர்ப்பார்க்கும் மதிப்பெண்கள் கிடைக்காமல் போகலாம். இறைவழிபாடும், கிரகவழிபாடும் அவசியம் தொடர்ந்து தங்களுக்கு தேவை.

துலாம்: 6ல் ராகு 12ல் கேது: பொற்காலத்தை வழங்க உள்ளது. எதிலும் எங்கும் எப்பொழுதும் வெற்றியே கிடைக்கும். எதிரிகளும், எதிர்ப்புகளும் விலகி ஓடும். சாதனைகள் சில செய்ய வாய்ப்பு கிடைக்கும். நோய் நொடி குணமாகும். கடன் அடைபடும், பொன், பொருள், வீடு வாகனம், நிலம், சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். 12ல் உள்ள கேதுவால் தீர்த்த யாத்திரை, ஆன்மீக ஞானம், தெய்வ தரிசனம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் வெற்றி வாய்ப்பு கிட்டும்.



விருச்சிகம்: 5ல் ராகு 11ல் கேது: நன்மைகள் கிடைக்க கூடிய காலமாகும். ஒரு சிலருக்கு திடீர் பணவரவு ஏற்பட வாய்ப்பு கிடைக்கும். குழந்தைகள் வழியில் செலவு ஏற்படும். லாபஸ்தானத்தில் கேது இருப்பதால் ஆன்மீக விஷயங்களில் ஈடுபாடு ஏற்படும். காதல் தோல்வி, குழந்தையின்மை பிரச்னை, பூர்வீக சொத்தில் பிரச்னை ஏற்படும். மாணவர்கள் படிப்பில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. வேலை பார்க்கும் இடங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்வது நல்லது.

தனுசு: 4ல் ராகு 10ல் கேது. சோதனை காலம் என்றே சொல்லலாம். வீடு, நிலம், வாகனத்தால் செலவு ஏற்படும். கோர்ட் வழக்குகளில் தோல்வி, தொழில், செய்யுமிடத்தில் பிரச்சனை தொழில் நஷ்டம். கணவன்:-மனைவி பிரச்சனை, கடன், நோய்நொடி, மேலதிகாரிகளால் தொல்லை, வீண் விரய செலவு போன்ற தீமை தரும் பலன்களே நடக்கும். மாணவர்களுக்கு படிப்பில் மந்தநிலை ஏற்படும். ஒரு சிலருக்கு கல்வியில் தடையோ, தோல்வியோ ஏற்படலாம். நிதானமாக செயல்படுவதே நல்லது.

மகரம்: 3ல் ராகு 9ல் கேது: எதிர்பார்க்கும் காரியங்கள் அனைத்தும் நல்லபடியாகவே நடக்கும் வாய்ப்பு கிட்டும். எதிலும் தைரியமாகவும் துணிச்சலுடன் செயல்பட்டு வெற்றிகாணலாம். எதிர்பாரா பணவரவும் சொத்து சேர்க்கையும் ஏற்படும். நோய் நொடிகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். தந்தை வகையில் செலவுகள் ஏற்படலாம். நீண்ட நாட்களாக எதிர்ப்பார்த்து இருந்த கவலை மறையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காணலாம்.

கும்பம் : 2ல் ராகு8ல் கேது:- 2ம் இடமான கும்பம் தன ஸ்தனாத்தில் ராகு சஞ்சரிப்பதும் 8ம் இடமான அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதும் துன்பத்தையே கொடுக்கும். குடும்பத்தில் குழப்பம் தனவிரயம், வாக்குதவறுதல், கடன், பொன், பொருள் இழப்பு, விஷகெண்டம், வீண் பிரச்சனைகள் போன்ற தீமையான பலன்களே நடக்கும். மேலதிகாரிகளின் பகை, விரும்பாத இடமாற்றம், பதவி இழப்பு ஏற்படும். குடும்பத்தில் பதவி இழப்பு ஏற்படும். குடும்பத்தில் எல்லோரையும் அனுசரித்து நடந்து கொள்வதே நல்லது. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தவும்.

மீனம்: ஜென்ம ராகு 7ல் கேது: மிகுந்த வேதனைகள் ஏற்படக்கூடிய காலமாகும். தோல்வி, குழப்பம், பயம் நஷ்டம், அவமானம், அரசு பகை, அரசு தண்டனை, எதிரிகளால் தொல்லை, கடன் தொல்லை, கணவன்-மனைவி பிரிவு, குடும்ப பகை, போன்ற தீமையான பலன்களே ஏற்படும். அரசியலில் அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு பதவி இழப்பு மேலதிகாரிகளால் பகை, தண்டனை, விரும்பாத இடமாற்றம் போன்ற கெடுபலன்கள் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் மந்தநிலை ஏற்பட்டு ஞாபகசக்தி குறையும்.

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



நாடார் சமுதாயத்தின் கைராசியான
திருமண தகவல் மையம் எங்களிடம்
குமரி மாவட்டம், நெல்லை,
தூத்துக்குடி, விருதுநகர் மற்றும்
தமிழ்நாட்டிலுள்ள அனைத்து
நாடார்களுக்கும் (இந்து,



கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து
தரப்படும்.

**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ஹராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

முகவரி: எண்:389, T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182),
திருவொற்றியூர், சென்னை-19.

நிறுவனர்- ஆர்.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்-
9444247847.

தொடர்பு எண்: 044-43508080, 7299989798,
8056299454, 7092890830.

# ஸ்ரீ அன்னை அபிராமி
# திருமண தகவல் மையம்

**அனைத்து சமூகத்தினருக்கும்**

**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-2000 மட்டும்.**
**நகை ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

முகவரி: எண்:386, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை-19.

தொடர்பு எண்: 9941989798, 7094059798,
9488847847, 8148529898.

# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:வெளவால்தொத்தி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-திருவொற்றியூர், சென்னை, பிறந்ததேதி-5.3.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-B.Tech., (IT)., Heymath, மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள வேலைபார்க்கும் மணமகன் தேவை. 9042426069, 9094432584, 8148425373. File No:M-115-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | செவ் | |
| சூரி புத | இராசி | | கேது குரு |
| ராகு சனி | | | |
| | லக் | சந் | |

| | | | |
|---|---|---|---|
| சூரி சனி | புதன் | | |
| | அம்சம் | | கேது செவ் |
| ராகு | | | லக் |
| சுக் சந் | | குரு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.10.1997, நிறம்-புதுநிறம், உயரம்-5.6, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (CSE)., MBA., Senior System Engineer., Infosys., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அணுகவும். 9003207002, 9444013984, File No:M-103-G. e-mail:postbox33736@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | லக் |
| வியா | | | ராகு |
| செவ் | சுக் புத | சூரி சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | கேது செவ் | | |
| | அம்சம் | | புத வியா |
| லக் சூரி | | | |
| | சந் | சனி ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:திவ்யதர்ஷினி, சொந்தஊர்-தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-12.10.1998, நேரம்:காலை:11.2, உயரம்-5.5, நிறம்-சிகப்பு, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை 4ம் பாதம், லக்கினம்:மிதுனம், படிப்பு-M.Sc., (Physics)., B.Ed., Private School Teacher, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9245486806, 9789782738. M-235-G ராகுதிசைஇருப்பு-02வருடம் 03மாதம் 18நாள்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சந் |
| குரு கே | இராசி | | |
| மாந் | | | செவ் ராகு |
| லக் | | புத | சூரி சுக் |

| | | | |
|---|---|---|---|
| சந் சனி | | லக்கு ராகு | செவ் சுக் |
| | அம்சம் | | |
| புத | | | சூரி |
| | கேது | | மாந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ருபினி, சொந்தஊர்:கோவில்பட்டி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-12.3.1993, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம், படிப்பு-B.C.A., AGS., மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி முடித்து வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9600171002, 9171778859. File No:M-68-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் | மாந் | கே | செவ் லக் |
| சுபு சனி | இராசி | | |
| | | | |
| | ராகு | சந் | வியா |

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் புத | | சூவி மாந் |
| சுக் | அம்சம் | | கேது |
| ராகு | | | |
| | லக் | சனி | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:7,05,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் | அம்சம் | | குரு |
| சந் | | | செவ் ராகு |
| | | புத லக் | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-தென்காசி மாவட்டம், பிறந்ததேதி-16.12.1997, வயது-25, நிறம்-புதுநிறம், உயரம்-167செ.மீ, ராசி-மிதுனம், நட்சத்திரம்-புனர்பூசம் 2ம் பாதம், படிப்பு-M.Sc., Biotechnology, Currently Prusuing Ph.D., Biotechnology with Stipend., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை.9488574646, 9443971328. File No:M-188-G

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) மாந் | | | சந் |
| கேது | இராசி | | |
| லக்செ குருசு | | | ராகு |
| புத(வ) சூரி | | | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூகே புத(வ) | சந் | லக் |
| செவ் மாந் | அம்சம் | | |
| | | | குரு |
| சனி (வ) | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பெருமாள்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-29.12.1995, நிறம்-சிவப்பு, உயரம்-5.6, ராசி-மீனம், நட்சத்திரம்-உத்திரட்டாதி பாதம் 2, படிப்பு-B.Sc., B.Ed., M.Sc., M.Ed., வேலை-K.V. School Teacher., மாதவருமானம்-20,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9940425163, 9123511448 File No:M-163-G.

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| சனி | இராசி | | |
| சுக் | | | |
| புகுரு சூசெ | | | லக் ராகு |

| | | | |
|---|---|---|---|
| கேது சனி | சுக் | குரு | |
| | அம்சம் | | சூரி |
| | | | |
| செவ் புத | | | சந்ரா லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| லக் | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ) சனி | ராகு | (வ) வியா | |
| சூரி சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ் புத |

## இந்து நாடார் மணமகன் தேவை.

என்.ஹரினி, சொந்தஊர்:விருதுநகர், இருப்பிடம்-ஒரகடம், அம்பத்தூர், பிறப்புதேதி-22.6.2001, நிறம்-மாநிறம், உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள மணமகன் தேவை. (ஹரிணி நடக்கும் போது கொஞ்ச நேரம் பிடித்து கொண்டு நடப்பாள், அவள் வேலை மற்றும் வீட்டு வேலையும் அவளே செய்வாள். மாப்பிள்ளைக்கு வீடு, கார் தருகிறோம். மாப்பிள்ளை சொந்த தொழில், அரசாங்க வேலை அல்லது வேலை இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை. சென்னை அம்பத்தூரில் சொந்தவீடு, கடை, வீடு வாடகைக்கு உள்ளது. தொடர்புக்கு: 9710272313, 8778902273, 6385303925, File No: M-248-G.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | புத சனி | சூரிகுரு சந்ராகு |
| | இராசி | | |
| | | | லக் |
| கேது | செவ் | | |

| | | | |
|---|---|---|---|
| சந் | | சனி | |
| செவ் | அம்சம் | | கேது |
| ராகு | | | லக் |
| சூரி | | சுக் குரு | புத |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | விருதுநகர் | 27 | M.Sc | BE - வேலை | 5.2 | 9840401652 | விருச்சிகம்-அனுஷம் | P962 | 70பவுன் |
| 2. | திருநெல்வேலி | 24 | B.E,M.E | வெளிநாடு,சாப்ட்வேர் | 5.5 | 9442221193 | கும்பம்-அவிட்டம் | P963 | 100பவுன் |
| 3. | தூத்துக்குடி | 31 | M.E | டிகிரிபடித்த | 5.3 | 9710219269 | கடகம்-பூசம்3 | P964 | 100பவுன் |
| 4 | நெல்லை | 24 | B.E | சொந்தவீடுபடிப்புவேலை | 5.5 | 9841023175 | மேஷம்-பரணி | P965 | 100பவுன் |
| 5 | திருநெல்வேலி | 29 | B.Tech | வேலைபார்க்கும் | 153 | 7559022688 | திருவாதிரை-மிதுனம் | P966 | 100பவுன் |
| 6 | தூத்துக்குடி | 29 | B.E | படித்துவேலை | 5.2 | 8608388499 | விருச்சிகம்-விசாகம் | P967 | 12பவுன் |
| 7 | தூத்துக்குடி | 31 | MBA | படித்துவேலை | 5.2 | 7299447677 | தனுசு-பூராடம்3 | P968 | நேரில் |
| 8 | திருநெல்வேலி | 26 | BDS | BDS,MDS,MBBS | 165 | 9840760321 | மிதுனம்-திருவாதிரை | P970 | நேரில் |
| 9 | திருநெல்வேலி | 23 | MBA | படித்தகுணமுள்ள,வேலை | 5 | 9655683738 | மிதுனம்-புனர்பூசம் | P971 | நேரில் |
| 10 | தூத்துக்குடி | 28 | B.E | DeputyCollector/EqualRank | 5.6 | 9444456637 | சிம்மம்-மகம் | P973 | நேரில் |
| 11 | ஆறுமுகநேரி | 28 | M.Sc | படித்துவேலை/தொழில் | 5.7 | 9840038683 | ரிஷபம்-மிருகசீரிஷம் | P974 | நேரில் |
| 12 | தூத்துக்குடி | 29 | B.Sc,M.Sc,B.Ed | படித்துவேலை/தொழில் | 5.2 | 9092581247 | ரிஷபம்-ரோகிணி4 | P975 | 20பவுன் |
| 13 | தண்டுபத்து | 27 | M.A | படித்துவேலை/தொழில் | 5.2 | 9445007100 | மகரம்-திருவோணம் | P976 | 200+7 |
| 14 | தூத்துக்குடி | 28 | M.A,B.Ed | படித்துவேலை/அரசு | 5.3 | 8300883696 | மிதுனம்-மிருகசீரிடம்4 | P977 | நேரில் |
| 15 | மதுரை | 25 | B.E | படித்துவேலைசாப்ட்வேர் | 5.4 | 9791126235 | விருச்சிகம்-மிருகசீரிடம் | P978 | நேரில் |
| 16 | தூத்துக்குடி | 24 | B.E | படித்துநல்லவேலை | 5.1 | 9710891343 | கும்பம்-சதயம் | P980 | 40பவுன் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 26 | BE-ECE | குணமுள்ளபடித்துவேலை | 165 | சென்னை | 9444289219 | 448G | 60பவுன் |
| 2 | தூத்துக்குடி | 30 | M.Sc,B.Ed | மறுமணம் | - | சென்னை | 9094068654 | 449G | மறுமணம் |
| 3 | தூத்துக்குடி | 24 | B.Com | நல்லமணமகன் | 164 | சென்னை | 9380747220 | 450G | நேரில் |
| 4 | தூத்துக்குடி | 26 | BTP | பல்/கண்டாக்டர்/தொழில் | 5.3 | சென்னை | 9790743986 | 451G | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 26 | B.E | டிகிரிபடித்துவேலை | 173 | சென்னை | 9841315005 | 348G | 40பவுன் |
| 2 | தூத்துக்குடி | 27 | B.E | ஐ.டி/அரசு வேலை | 5.3 | சென்னை | 8122835249 | 349G | நேரில் |
| 3 | திருநெல்வேலி | 23 | B.A | தொழில்/வேலை | 5.4 | சென்னை | 8903461787 | 351G | 50+4 |
| 4 | சென்னை | 29 | B.Com | மறுமணம் | 5.3 | சென்னை | 9840425192 | 352G | மறுமணம் |


நாடார் வாழ்களுக்கான நம்பிக்கையான இடம்

இமயம்
திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள் வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.





மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்

எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.

தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## C.S.I.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:அருலூர், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-20.6.1999, உயரம்-164செ.மீ, நிறம்-மாநிறம், படிப்பு-B.Com., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல மணமகன் தேவை. தொடர்புக்கு:9380747220, 9962562333, File No:CSI-450-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:கள்ளிகுளம், திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.8.1999, நிறம்-சிவப்பு, உயரம்-150செ.மீ, ராசி-மேஷம், நட்சத்திரம்-அசுபதி 3ம் பாதம், படிப்பு-B.E., (CSE), வேலை-சாப்ட்வேர் (சிறுசேரி), மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை.8754317180, 9360032452, 9360032452. File No:M-254-G

| | | | |
|---|---|---|---|
| | சந் விசனி | | |
| | இராசி | | ராகு |
| கேது | | | புகுரு சுக் |
| லக் | செவ் | | |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் கேது | சந் |
| | அம்சம் | | சூபுத வியா |
| | | | சனி |
| | ராகு | | லக் செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:காயாமொழி, (ஆதித்தநாடார் குடும்பம்) திருச்செந்தூர் தாலுகா, 27.4.1990ல், பிறந்து (நட்சத்திரம்-ரோகிணி, ராசி-ரிஷபம்), படிப்பு:-B.Tech., படித்து அமெசான் சென்னை ஐ.டி கம்பெனியில் வேலைபார்க்கும் மணமகளுக்கு, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி6அங்குலம், சம்பளம்-60,000 நல்ல சம்பளத்துடன் ஐ.டிகம்பெனியில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. வெளிநாட்டில் (USA. ஆஸ்ரேலியா தவிர்த்து) வேலை பார்பவர்களும் தொடர்புகொள்ளலாம். 9176233235, 9791101986, 9176233235. File No:P-953-G.

| | | | |
|---|---|---|---|
| | சூ புத | சந் | வியா |
| செவ் சுக் | இராசி | | கேது |
| ராகு | | | |
| சனி | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | புதசு ரா |
| வியா | அம்சம் | | சூரி சந் |
| லக் செவ் | | | |
| கேது | சனி | | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:ஆறுமுகநேரி, பேயன்விளை, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-21.10.1999, நிறம்-மாநிறம், உயரம்-5.4,, ராசி-கும்பம், நட்சத்திரம்-பூரட்டாதி, படிப்பு-B.E., ComputerScience, படித்த இந்த மணமகளுக்கு, படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 8610995511, 9842672406, 8610995511,. File No:M-255-G.

| | | | |
|---|---|---|---|
| | லக்வி சனி | | |
| சந் | இராசி | | ராகு |
| கே | | | சுக் மாந் |
| செவ் | | சூரி புத | |

| | | | |
|---|---|---|---|
| | சந் | புத விகே | |
| | அம்சம் | | மாந் |
| | | | செவ் சனி |
| | லக்ரா சூரி | | சுக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-மதுராந்தகம், பிறந்ததேதி-15.7.1992, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-உத்திராடம் 2ஆம் பாதம், படிப்பு-B.E., (CSE)., அரசு பணி, சொந்தவீடு படித்த இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9944874005, File No:M-247-G.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | லக் | சூரி கேது |
| | இராசி | | புத சுக் |
| சனிசந் மாந் | | | வியா |
| ராகு | | | |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சூரி |
| | அம்சம் | | லக் |
| சந் மாந் | | | புதசுக் |
| செவ் | கே | | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

# Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.

106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com

---



N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

# N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு, M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**

4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.

---

**SSS**

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை

# திருமண தகவல் மையம்



**அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.**

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.

---

# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்



**மளிகை மொத்தம் , சில்லரை வியாபாரம்**

**Prop.S.ராமசாமி நாடார்,** Ph:22243263, Res:22671263, 9444150666.

**நங்கநல்லூர், பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க ஸ்தாபகர் மற்றும் நங்கநல்லூர், பழவந்தாங்கல் நாடார் சங்க தலைவர்.**

36, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.

---



**நாடார் வரன்கள்:** R.C, CSI, **இந்து நாடார்களுக்கு அணுகவும்,** IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., **மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,**

---



# ஜெயமுருகன் சிக்கன் & மட்டன் ஸ்டால்





89, கே.எச்.ரோடு, தி.நகர்,
சென்னை-17.
போன்:2814 3642.



R.வெங்கடேசன்

## அக்டோபர் 2ம் தேதி பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவுநாள் அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.







Ilakkia selvar Kumarianandan in Telangana Rajbhavan Hyderabad under care of his daughter Governor DrTamilisaisoundararajan for the past three years



# முதுமை-வரமா! பாரமா?

வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



லீலா ஸ்டீபன்,

இந்த சமுதாயத்தில் ஒரு குழந்தைக்கு பெயர் சூட்டும் போதோ அல்லது பிறந்த நாளில் வாழ்த்தும் போதோ நூறாண்டு! வாழ்க என வாழ்த்துவது வழக்கம். இதன் பொருள் அந்த குழந்தைக்கு தெரியாது. நூறாண்டை நோக்கி வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கே அதன் பொருள் புரியும்!

பெற்றோர் தம் பிள்ளைகளை எப்படியெல்லாம் சீரும் சிறப்புமாக வளர்க்கிறார்கள்! மழலைப் பருவத்தில் தம் தோளிலும் மார்பிலும் போட்டு பாசத்தோடு பாதுகாக்கின்றனர். படிக்கும் பருவம் வந்ததும் தரமான பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கின்றனர். தங்கள் தேவைகளைத் தியாகம் செய்து, அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்து, ஏன் வெளிநாடுகளுக்கு அனுப்பியும் சிறந்த கல்வியை அளிக்கின்றனர். பின்னர் நல்ல வேலையில் அமர்த்துதல், தக்க வயதில் ஆடம்பரமாகத் திருமணம் செய்தல், பின்னர் பேரக்குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற காரியங்களைச் செய்து சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து மகிழ்ச்சியடைகிறார்கள்.

கால ஓட்டத்தில், வயதும் ஓடிப்போவதே தெரிவதில்லை. ஓய்வு பெற்று வீட்டில் இருக்கவேண்டிய நிலை கொஞ்ச நாட்களிலேயே இவர்கள் பிள்ளைகளுக்குப் பாரமாகிவிடுகிறார்கள். இரண்டு மகன்கள் என்றால் மூத்தவன் வீட்டில் தாயையும், இளையவன் வீட்டில் தந்தையையும் பிரித்து வைத்து விடுகின்றனர். சேர்ந்து வாழவேண்டிய முதிர்வயதில் இது மிகக் கொடுமையான செயல்! ஒருவரை ஒருவர் பிரிந்து தவிக்கும் நிலை யாருக்குத் தெரியும்! ஒருவன் வீட்டில் முதிய தாய் மருமகளுக்கு ஒத்தாசையாகவும், பேரக்குழந்தையை கவனிப்பவராகவும் இருப்பார். முதியவர் இருக்கும் வீட்டில் மளிகை, காய்கறி வாங்க, மின்கட்டணம் செலுத்த, பேரப்பிள்ளைகளை பள்ளியில் விட, கூட்டிவர போன்ற பணிகளைச் செய்கின்றனர். காலப்போக்கில் மருமகளின் மாற்றம், மகனின் கண்டுகொள்ளாமை போன்ற மாற்றங்கள் ஏற்படும். கோவில் போன்ற விரும்பிய இடங்களுக்குச் செல்லவோ, நண்பர், உறவினரைப் பார்க்கவோ வாய்ப்பு கிட்டாது. தற்காலத்தில் செல்போன் சற்று ஆறுதல் எனலாம். மனதில் பட்டதைச் சொன்னால் கூட வீடுபோ போ என்கிறது, காடுவா வா என்கிறது இந்த பெரிசுக்கு என்ன நாட்டாமை வேண்டிகிடக்கு என அலட்சியம் செய்வார்கள்.

இன்னும் சில நாட்களில் அழையாத விருந்தாளியாக நோய்கள் அண்டிவிடும். பொருளாதாரத்தை எண்ணி குடும்பத்தில் புயல் வீச ஆரம்பிக்கும். மருத்துவச் செலவுக்கு ஒரு தொகை வேண்டும் இப்போது பெற்றோர் பாரமாகத் தெரிவார்கள். தன்னைச் சிறுவயதில் பெற்றோர் நோயில் கவனித்தது நினைவில் இருக்க நியாமில்லையே! இப்போது ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஓரளவு நிம்மதி!

இந்நிலையில் முதியவர் இருவரில் ஒருவர் இறந்துவிட்டால் மற்றவருக்கு வாழ்வே சூன்யமாகிவிடும். இப்போது இருக்கும் ஒருவர் மனம் தளர்ந்து விடலாகாது. தனிமையில் வாழவும் பழகிக் கொள்ளவேண்டும். திறன் இருப்பின், ஏதேனும் ஒரு சிறிய வேலை செய்து பொருள் ஈட்டலாம், சொத்து, பணம் இருந்தால் யாரையும் நம்பி எழுதிக் கொடுத்து ஏமாந்துவிடக்கூடாது. உஷாராக இருக்க வேண்டும். கூட்டுக் குடும்பமானால் அனைவரையும் அன்பு செய்து, அனுசரித்துப் போக வேண்டும். முடிந்தால் கைவசம் இருப்பின் பண உதவியும் செய்யலாம். ஒரு காலத்தில் நீங்கள் பெரிய அதிகாரியாகவோ, அதிபராகவோ, சிறப்பு பல பெற்றவராகவும் இருந்திருக்கலாம். புகழ் ஏணியில் இருந்திருக்கலாம் ஆனால் முதுமை சமூகத்தில் ஒரு சராசரி மனிதனாக்கி விடுகிறது. இனி நமது அதிகாரம் எடுபடாது. பிறர் பேசுவதை எண்ணி கோபமோ, மன அழுத்தமோ கொள்ளக் கூடாது. இது நமது ஆரோக்கியத்தைப் பாதிக்கும். இந்த வேதனை ஆளையும், நோய் தரும் வேதனை களையும் தாங்கிக் கொள்ளும் மன திடம் வேண்டும்.

ஒரு கட்டத்தில் நாம் பிறந்தபோது இருந்த நிலை வரலாம். அதை சீசன் 1ல் நம் அன்னை நம்மை அணைத்து, அழுது காட்டி அன்பாய்ப் பராமிடுத்தார் இது சீசன் 2 நம்மால் அசையக் கூட முடியாத நிலை அன்னையின் அன்பை எதிர்பார்க்க முடியாது நாம் பூமிக்குப் பாரம் என நாமே எண்ணத் தோன்றும் இப்போது செவிலியர் அல்லது ஆயா கவனிப்பார். அவர்களுக்கு நன்றிகூற வேண்டும். பொறுமை காத்து, அவர்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். நல்ல முடிவுக்காக இறைவனிடம் மன்றாடவேண்டும்.

பெரும்பாலும் பிள்ளைகள் தம் பெற்றோரை முதுமை காலத்தில் அன்பு செய்து, எல்லா வசதிகளையும் செய்து, நோயில் கவனித்து மதிப்பும் மரியாதையும் அளித்து இறுதிகாலம் வரை சிறப்பாகக் கவனிக்கின்றனர். ஆஸ்தி இருந்தால் மட்டுமல்ல, ஏழையானாலும் கவனிக்கத்தான் செய்கிறார்கள். சிலர் பல காரணங்களைக் காட்டி முதியோர் இல்லத்தில் சேர்க்கிறார்கள். நம்மைக் கண்ணாய்க் காத்தவர்களை காப்பகங்களில் சேர்ப்பதற்கு எப்படி மனம் வரும். அவர்கள் மனம் எப்படி பதறும். இது மனிதாபிமானமற் செயல். ஒரு சிலரோ, ஆஸ்தி எல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு ரயில்நிலையங்கள், கோவில்கள், வீதிகளில் அனாதையாக தவிக்க விட்டுச் செல்வதை இன்றும் கேள்விப்படுகிறோம். மனசாட்சி உள்ள எந்த பிள்ளையும் இந்த ஈனச் செயலைச் செய்யமாட்டார். சம்மந்தப்பட்டவர்கள் திருந்தினால் சமுதாயத்துக்கே நல்லது திருவாரூரைச் சேர்ந்த அமரூதின்ஷேக் தாவூது என்பவர் தன் தாய்மீது கொண்ட பாசத்தால் அவர் மறைந்த பின் ஐந்து கோடி செலவில் பளிங்குக் கற்களால் தாஜ்மகால் என்ற நினைவுச் சின்னத்தைக் கட்டியுள்ளார். 19வயதான சலைமான் தன் தந்தையின் ஆசையை நிறைவேற்ற டைட்டன் கப்பலில் மரணத்தைத் தழுவினார். இவர்கள் பாசத்தின் சிகரங்கள் அல்லவா. இவ்வாறு நினைவுச்சின்னம் எழுப்பியும், தாம் காரியங்கள் செய்தும் தம் முதிய பெற்றோரை நினைக்கும் பிள்ளைகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நம் பெற்றோர் வாழும் காலத்தில் ஏதாவது தவறுகள் இழைத்திருக்கலாம். கடினமாக நம் மனம் நோகும்படி பேசியிருக்கலாம். அதையெல்லாம் மனதில் வைக்கலாகாது. அவர்கள் மறைந்த பின் அவர்கள் எப்போதும் நம் நினைவில் வருகிறார்கள். அவர்கள் உயிரோடு இருந்தபோது அவர்களிடம் பாராமுகம் காட்டாமல், அருகில் இருந்து அன்பாய் பேசி இருக்கலாமோ? அவர்கள் பேச்சைப் பொறுமையாக கேட்டிருக்கலாமோ! நோயில் இன்னும் நல்ல மருத்துவரிடம் காட்டியிருக்கலாமோ? விரும்பியதைக் கொடுத்து, விரும்பிய இடங்களுக்குக் கூட்டிச் சென்று சந்தோஷப்படுத்தி இருக்கலாமோ என்ற பல எண்ணங்கள் நம் மனசாட்சியை உறுத்தலாம். இப்போது கவலைப்பட்டு என்ன பயன்? நாம் கடவுளை நேரில் காண முடியாது. எனவே கடவுள் நம் பெற்றோரைத் தெய்வமாகத் தந்துள்ளார். என எண்ணவேண்டும். அவர்கள் வான தூதர்கள். அவர்களைப் பாரமாக, சுமையாகக் கருதாமல், நமக்கு இறைவன் தந்த பரிசாக, சுகமாக எண்ண வேண்டும் முதுமையில் பாசத்தோடு பராமரித்தால் அவர்களின் ஆசிர் நமக்கு அபரிமிதமாகக் கிடைக்கும் இதனால் இறைவன் நம்மையும் நம் வாரிசுகளையும் நிறைவாக ஆசீர்வதித்துக் காப்பார். பெற்றோர் பாரமல்ல வரமே!!! சுமையல்ல சுகமே!!!

# உறவுகள்!

**படிக்காத மேதைகள் - தமிழக உறவு**

சென்னை மாநகருக்கு ஒரு சிறப்பு உண்டு. இங்கே பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர்கள் பள்ளிப் படிப்பைக்கூடப் பாதியிலே நிறுத்தியவர்கள். உலகப் புகழ் படிக்காத மேதை காமராஜர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் எழிலிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கவிராயர் உடுமலை நாராயணகவி, மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவியரசு கண்ணதாசன், சிறுகதை மன்னன் ஜெயகாந்தன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், பாரதிராஜா, துரும்பில் தொடங்கி மிகப்பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை நிறுவிய அருமை அண்ணாச்சி வி.ஜி.பன்னீர்தாஸ், மூன்று முறை சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்ற கமலஹாசன் ஆகியோர் அனைவருமே பள்ளிப்படிப்பை பாதியில் முடித்தவர்கள்தான். இது சென்னை மாநகரின் ஒரு தனிச்சிறப்பு அம்சம்தானே!

ஒவ்வொரு மனிதரும் குடும்பத்தாரோடு அமர்ந்து உணவு உண்ணும்போது, உணவு சிறப்பான ருசியோடு அமைந்திருக்க வேண்டும் என்று விரும்புவது உண்டு. அதற்கேற்ப உணவைச் சமைக்க வேண்டுமானால் பல்வேறு பொருட்களை நாம் ஒருங்கிணைத்துதான் சமைக்க வேண்டும். அப்போதுதான் உணவில் சுவை ஏற்படும். குறிப்பாக உப்பு, மிளகு, சீரகம், மிளகாய், கடுகு, பருப்பு போன்ற பல பொருட்களை சமையலில் சேர்க்கிறோம். மேலும் ருசி உண்டாக்கக் கருவேப்பிலையைச் சேர்க்கிறோம். குழம்பில் கருவேப்பிலையைப் போடுகிறோம். ஆனால் உணவு சாப்பிடும்போது அந்தக் கருவேப்பிலையை சிலர் சாப்பாட்டிலிருந்து தனியே எடுத்து வெளியில் போட்டு விடுவார்கள்.

மனித உறவுகளிலும் இப்படித்தான். சிலர் எல்லா விழாக்களிலும் வந்து கலந்துகொள்வார்கள். நல்லது, கெட்டது எந்த விழாவானாலும் வித்தியாசம் பார்க்காமல் வந்து பங்கேற்பார்கள். ஆனால் இன்னும் சிலர் வாழ்க்கையில் வசதி வந்து நிலை உயர்ந்து விட்டால் வந்த பாதையை மறந்து, பழயதையெல்லாம் மறந்து போவார்கள். மனிதர்களையும் பிரித்துப் பார்க்கத் தொடங்குவார்கள். தங்கள் சுயநலத்துக்காகச் சிலரைப் பயன்படுத்திக் கொண்டு உணவில் கருவேப்பிலையைத் தூக்கி எறிவதைப் போல உதவி செய்த மனிதர்களையும் வேலை முடிந்ததும் தூக்கிப் போட்டு விடுவார்கள். நன்றி மறந்த மனிதர்களாய் மாறிவிடுவார்கள்.

அப்படி நன்றி மறப்பவர்களையும், மனிதர்களை வசதி அடிப்படையில் பிரித்துப் பார்த்து, வசதியற்றவர்களை ஒதுக்கித் தள்ளுபவர்களையும் நாவின் விமர்சனத்தால் சுட்டிக்காட்டி, அவர்களைத் திருந்தி வாழச் செய்ய வேண்டும். அப்போதுதான் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். நல்லது, கெட்டதுகளில் வந்து பங்கேற்பார்கள் அன்பைப் பகிர்ந்து கொள்வார்கள். உணவில் நாம் உப்புக் கலந்திருப்பது உணவைப் பார்த்தால் தெரியாது. ஆனால் சுவைத்தால் தெரிந்துவிடும். உறவுகளின் பலமும், சுவையும் உறவுகள் ஒன்று சேரும்போது தான் நமக்குத் தெரியவரும். வாழ்க்கையில் உறவுகள் வளரவேண்டுமானால் நம்மிடம் உள்ள வளங்களைப் பிறருக்குக் கொடுத்து, நாமும் பெற்று வாழும் தன்மைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கொடுக்கும்போது கருணை உணர்வையும், பெறும்போது நன்றி உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**பாலகன் ஆறுமுகசாமி - தமிழகம் உறவு**

சேரன்மகாதேவி தொகுதி முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் பாலகன். இவர், காமராஜரின் அன்பிற்குரியவராய் அவருடன் நெருங்கிப் பழகியவர். பெரிய தொழிலதிபர். பல ஆயிரம் குடும்பங்கள் இவரது நிறுவனத்தால் வாழ்வாதாரம் பெற்றனர். இவரது புதல்வர் பாலகன் ஆறுமுகசாமி கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் வசித்து வருகிறார். அங்கு ஆடிட்டர் தொழில் செய்து வருகிறார். மேலும் தீவிரத் தமிழ்ப் பற்றாளர். வாஷிங்டன் தமிழ்ச் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். நான் அமெரிக்கா சென்றிருந்தபோது என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தார். நானும், எனது உதவியாளர் பீட்டரும் அவரது வீட்டில் விருந்தினர்களாகத் தங்கினோம். அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். இதைத்தான் உறவின் மகிமை என்கிறேன். (தொடரும்)




AB

Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277

ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.





செல்:9444484977, 9962454977, 044-25980239.

ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும். நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை



S.ராஜையா நாடார்

சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,
(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29
போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**சிரிக்க முடியவில்லை...**



பெற்றவர்கள் சம்மதிக்கிறார்கள்.. வேந்தர் சம்மதிக்கிறார்.. வேத வித்தகர்களும் சம்மதிக்கிறார்கள்.. நாளை.. ஊரறிய உலகறிய நடக்கப் போகிற ஒரு திருமணம் இது..

அதில் என்ன குற்றம் இருக்கிறது.. அதில் என்ன கேலி இருக்கிறது.. அதனால்தான் கூறுகிறேன்.. உலகம் உன்னை பார்த்து சிரிக்காது..

அதற்கு பதில் எதுவும் சொல்லாமல் நின்றாள் திரவுபதி.. எனவே.. தொடர்ந்து சிகண்டியே பேசினான்..

ஒரு வகையில் பார்த்தால்.. நீ அதிர்ஷ்டசாலி திரவுபதி.. எப்படி..

அன்று குந்தியோடும் சத்தியவதியோடும் உறவு வைத்தவர்கள் அந்நியர்கள்..

எனவே.. அந்த ஒருநாள் உறவோடேயே.. அவர்களை விட்டு.. அந்த அந்நியர்கள் விலகிச் சென்று விட்டார்கள்..

ஆனால் உன்னுடைய நிலைமை அப்படி இல்லை.. ஐந்து பேருமே உனது கணவர்கள்.. எனவே இது அதிகாரப்பூர்வமான ஒரு உறவு..

முறைப்படி உன்னை இவர்கள் திருமணம் செய்து கொள்வதால்..

இவர்கள் ஓடிப்போக மாட்டார்கள்.. உன் ஆயுள் முழுவதுமே உன்னோடு சேர்ந்து வாழ்வார்கள்..

கணவனுக்கு விசுவாசமாக இருப்பதுதானே ஒரு பெண்ணுக்கு கற்பு.. அப்படியானால்..

உன் ஐந்து கணவர்களுக்குமே நீ விசுவாசமாக இருந்தால்.. அதுவும் கற்புதானே..

திருமண வாழ்க்கை என்பதே ஒரு வாக்களிப்புதான்..

ஒருவர் மற்றவருக்கு துரோகம் செய்யக் கூடாது.. இது தான் அந்த வாக்களிப்பு..

அந்த வாக்குறுதியை நீ காப்பாற்றுவது உறுதி என்றால்.. அது கற்புதானே..

சிகண்டி... திரவுபதியின் வாயை முழுமையாகவே மூடிவிட்டான் என்றுதான் கூற வேண்டும்..

எனவே.. மவுனமாக நிற்பதைத் தவிர.. வேறு எதையுமே திரவுபதியால் செய்ய முடியவில்லை..



பலி கொடுக்கப்போகும் ஆடு அவள்.. அவளுக்கும் கோரிக்கைகள் இருக்கின்றன.. என்றாலும் அதை அவளால் சொல்ல முடியவில்லை..

ஐந்து கணவர்கள் என்ற கொள்கையை.. சிகண்டி கூறியதை போல.. உலகம் ஒருவேளை ஏற்றுக் கொள்ளலாம்.. ஆனால் அவளது மனம்..

அதை ஏற்குமா.. அவளது உடல்.. அது ஏற்குமா.. இனி இரவுகள் தூங்கும்.. ஆனால் அவள் தூங்குவாளா..

கணவன் ஒருவனே என்றால்.. அவனது வரவே ஒரு விசேஷமாகும்.. அவனோடு சேர்ந்திருப்பதும்.. அவனுக்காக காத்திருப்பதும் கூட விசேஷங்களாகும்..

ஆனால் இவன் வந்தால் இவனோடு.. அவன் வந்தால் அவனோடு.. யார் வந்தாலும் உறவாடு என்றால்.. அதற்கு பெயரா திருமணம்..

குண விஷயங்களில் இவள் ஒரே மாதிரிதான்.. ஆனால் அவர்களோ அப்படியல்ல.. பல மாதிரி..

அவர்களுக்கு ஏற்ற மாதிரியெல்லாம் அவளை இரு என்றால்.. அது எந்த மாதிரி இருக்கும்..

திருமணம் என்பது உறவுதானே தவிர.. உத்தியோகம் அல்ல..

உட்கார்ந்தபடியே.. திரவுபதி இப்படியெல்லாம் சிந்தித்தாள்.. ஆனால் சிகண்டியிடமோ.. எதையும் கேட்கவில்லை..

சரி அண்ணா.. தந்தை அவர்கள் சொன்னபடியே நடந்து கொள்கிறேன்..

ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற்றெடுக்கப்பட்ட பெண்தானே நான்..

ஆகவே உங்களோடு இருக்கும் அந்த ஒப்பந்தத்தின் படியே வாழ நான் முயற்சிக்கிறேன்..

இனிமேல் நீங்கள் சிரிக்க சொன்ன படியெல்லாம் சிரிப்பேன்.. அழச் சொன்ன படியெல்லாம் அழுவேன்..

அப்படியே வாழ்ந்து முடித்து விடுகிறேன்.. பதிலுக்கு சிகண்டி சொன்னான்..

வாழ்வாய் திரவுபதி.. நீ வாழ்வாய்.. ஊர் மெச்ச நீ வாழ்வாய்.. உலகம் மெச்ச நீ வாழ்வாய்.. வாழ்த்தினான் அவன்.. (தொடரும்)

**"இந்திய அறிவியல் கழகத்தில் எம்.டெக் (கணிதம்) படித்தால் உடன் உலகம் முழுவதும் வேலை வாய்ப்பு"**

-M.ஞானசேகர், தொழில் ஆலோசகர், 9566253929.

உலகின் தலைசிறந்த கல்வி நிலையங்களில் சில இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் சயின்ஸ் அதாவது இந்திய அறிவியல் கழகம் ஆகும். இதனை 1911ம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் கேட்டுக் கொண்டபடி பிரபல தொழிலதிபர் J.R டாட்டா அவர்களால் 1911ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1956ம் ஆண்டு நிகர் நிலை பல்கலைக் கழகமாக மாறியது.

இங்குள்ள படிப்புக்கள் எவை:- உயிர்வேதியல் முதல் விமான விண்வெளியியல் வரை அனைத்து அறிவியல் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. அனைத்திலும் ஆய்வுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். இயற்பியல், வேதியல், உயிரியல் (அடிப்படை அறிவியல்) ஆகிய மூன்றிலும் 45 வகை துறைகள் இங்குள்ளன. சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களே சேர்க்கப்படுவதால் அனைவரும் அதிக மதிப்பெண் பெறுகின்றனர்.

ஸ்காலர்ஷிப்:- இங்கு படிப்பவர்களுக்கு கழகமும், அரசும் கல்வி உதவித் தொகை வழங்குகின்றன. இங்கு படித்தால் வெளிநாட்டு வேலை உறுதி ஆகும்.

இங்கு அறிவியல், பொறியியல் பிரிவில் எம்.எஸ்.ஸி, பிஎச்.டி, எம்.இ, எம்.டெக் என (ஒருங்கிணைந்த) பல படிப்புகள் 4 ஆண்டு கால B.S (ஆராய்ச்சி) படிப்புகள் உள்ளன.

இதற்கான சேர்க்கை தொடங்கியுள்ளன. என்ன படிப்பு? என்ன துறை என www.iisc.ac.in பார்த்து அறியுங்கள்.

முழு விவரம் பெற: Indian Institute of Science, Bangaluru, Karnataka. Ph: 080-22933400, 23600853. www.ug/iisc.ac.in, i-admission.ug@iisc.ac.in.




செல்: 98405 57997, 98415 49955

**V.S.குமார் ரியல் எஸ்டேட்**

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377



21.ரகுவரனின் வீட்டிற்கு வந்து அனிதாவையும், சுஜாதாவையும், அம்மாவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

ரயிலடிக்கு வந்து ரயிலேறும் போது ரகுவரனின் அம்மாவிற்கு மயக்கம் வந்து குப்புற வீழ்ந்து மூர்ச்சையானாள்.

இரண்டு நாளாய் அன்ன ஆகாரம் ஏதுமின்றி அழுது கொண்டிருந்ததால் சற்று தூரம் நடந்து வருவதற்குள் அம்மா நடைதளர்ந்து, தடுமாறி மூர்ச்சித்து வீழ்ந்தாள்.

அவசர அவசரமாய் மருத்துவமனைக்கு அம்மாவைத் தூக்கிக் கொண்டு போனார்கள். டாக்டர் சிகிச்சை அளித்த சிறிது நேரத்திற்குள் அவள் கண்விழித்தாள். குளுகோஸ் சலைன் நரம்பு வழியில் பிரயாணித்து அவள் உடல் திரானியைப் பெருக்க முயன்று கொண்டிருந்தது.

டாக்டர் இன்னும் இரண்டு நாட்கள் பூரண ஓய்வில் இருக்க வேண்டும் என்று திட்டமாகச் சொன்னார்.

அம்மா சென்னைக்குச் செல்ல இயலாதநிலை. சாவித்திரியைத் தேடி உடனே போயாக வேண்டிய கட்டாயம்...!

என்ன செய்வது...?

ஆண்கள் மூவரும் புறப்படுவதென தீர்மானம் செய்யப்பட்டபோது அனிதா தானும் வந்தே தீருவேன் என அடம்பிடித்தாள்.

அவளைத் தவிர்க்க இயலாது என்று தெரிந்தது. அப்பா அவளை மட்டும் தங்களுடன் அழைத்துப் போவதென்று முடிவெடுத்தார். அம்மாவிற்குத் துணையாக சுஜாதா இருக்க வேண்டியதாயிற்று.

புறப்பட்டார்கள்.!

நால்வரும் சென்னைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

ரயில்வண்டி சென்னை எழும்பூர் வந்து நிற்கும்போது காலை ஒன்பது மணியாகிருந்தது. இறங்கினார்கள்.

ரயிலடியின் முன்புறத்திற்கு வந்து நின்றார்கள். எதிரே நீண்டு கிடக்கும் தார்ச் சாலையில் மேற்கும் கிழக்குமாய்ச் சீறிப்பாயும் மோட்டார் வாகனங்களையும், குறுக்கும் நெடுக்குமாய்ப் பாய்ந்து, நெளிந்து நுழைந்து, வளைந்து பரபரப்புடன் நடக்கும் மனிதர்களையும் கண்டதும் இந்த ஜனசந்தடியில் எங்குபோவது... யாரைப் பார்ப்பது... எப்படி சாவித்திரியைத் தேடிக்கண்டு பிடிப்பது என்ற பிரமிப்பில் அழுகையே வந்து விடும் போலிருந்தது அவர்களுக்கு.

கண்பிதுங்க நின்று கொண்டிருக்கும்போது அவர்கள் முன்னே சாவித்திரியின் அண்ணாவின் நண்பர் மெடிக்கல் ஸ்டோர் திருவேங்கடம் வந்து நின்றார்.

"ஹலோ... திருவேங்கடம்... நீங்கள் எங்கே இப்படி...?" அண்ணன் கேட்டார்.

"வியாபார விசயமாய் வந்தேன். நீங்கள் எங்கே இப்படி...?"

சுருக்கமாகச் சொன்னான் சாவித்திரியின் அண்ணன்.

"என் அண்ணியின் வீடு அசோக்நகர் போலீஸ் ஸ்டேசன் பக்கத்தில் இருக்கிறது. வாருங்கள் அங்கே உங்களைத் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன். வாருங்கள். அண்ணன் பாங்க் ஆபீசர். அண்ணி கல்லூரிப் பேராசிரியை. உதவும் மனப்பாங்குள்ளவர்கள். உங்களுக்கு உதவுவார்கள்" அன்போடும் கரிசனத்தோடும் அழைத்தார் மெடிக்கல் ஸ்டோர் திருவேங்கடம்.

கடவுளாகப் பார்த்து ஒரு பிரதிநிதியை அனுப்பியது போலிருந்தது அவர்களுக்கு. மறுப்பேதும் சொல்லாமல் டாக்சி பிடித்து புறப்பட்டார்கள். பெரிய வீடு. விசாலமான அறைகள்.

அதைவிட திருவேங்கடத்தின் அண்ணன் அண்ணி, இருபெண்கள் அனைவரின் இதயங்கள் அதிக விசாலமானவை என்பது அவர்கள் அங்கு சென்ற அரை மணிநேரத்திலேயே புரிந்தது.

அனிதாவைத் தன் பெண்ணைப்போல அன்புடன் தன் அறைக்குள் அமர்த்தி வைத்து விபரம் கேட்ட அந்தக் கல்லூரிப் பேராசிரியை மனம் வருந்தினார். சாவித்திரியைக் கண்டுபிடிப்பது தன் கடமை எனக் கருதினார். தன் கணவரிடம் பரிந்து பேசினார். பாங்க் அதிகாரியான அவர் தனக்குத் தெரிந்த பெரிய போலீஸ் அதிகாரிகள் மூலம் நண்பர்கள் மூலம்... சென்னையை வலைபோட்டு அரித்துப் பார்த்தார்.

எவ்வளவோ முயற்சிகள்....

எத்தனையோ கரிசனங்கள்...

ம்கூம்!

சவித்திரியைப் பற்றிய தடயமே கிடைக்கவில்லை.

யோசித்தார்கள்.

அனிதாவிற்குப் திடுப்பென ஒரு ஆலோசனை தோன்றியது.

"அப்பா..."

"என்ன அனிதா....?"

"ஒரு ஆலோசனை..."

"சொல்லு..."

"என் பெயரில் அண்ணிக்கு விண்ணப்பம் தெரிவித்துத் தினசரிப் பத்திரிகைகளிலெல்லாம் ஒரு விளம்பரம் கொடுத்தால் என்ன....?"

"கொடுத்தால்...?"

"எனக்காக... என் கண்ணீர் வரிகளுக்காக ... சென்னையில் அவர்வரும் வரை நானிருப்பேன் என்ற அன்பிற்காக... நிச்சயம் என்னைத் தேடி வருவார்...!" நம்பிக்கையுடன் சொன்னாள்.

22.அலுவலகத்திலிருந்து வெளியேறிய சாவித்திரிக்குள் குழப்பமும், வருத்தமும் மேலோங்கியது. எங்கு செல்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் கால்போன போக்கில் நடந்தாள்.

சென்னையில் எந்த இடமுமே அறிந்திராத சாவித்திரியின் கால்கள் தன்னிச்சையாகவே அவளை ரெயிலடியில்தான் கொண்டுவிட்டிருந்தது.

தாம்பரம் நோக்கிச் செல்லும் மின்சார வண்டி வந்து நின்றது. ஏறினாள். வண்டி புறப்பட்டது. அவளுக்குள் சிந்தனையும் தான்.

கல்யாணம் முடிந்த இரண்டரை மாத காலங்களில் தன் வாழ்க்கைப் பாதையில்தான் எத்தனையெத்தனை நெருடல்கள் நெருஞ்சிச் செடிகள்..

கணவன் என்ற போர்வையில் வந்தவன் உயிர் குடிக்கத் துடிக்கும் காலனாய் எங்கோ கண் காணாத இடத்திலமர்ந்து கொண்டிருக்கிறான்.

வயிற்றையும் மானத்தையும் காத்துக்கொள்ள ஒரு புகலிடம்.. ஒரு வேலை என்று தேடிப்போனபோது.... தன்னையே நம்ப இயலாதபடி அருமையாய்...அலைச்சலே இல்லாமல் வேலையும் கிடைத்தது. வேலை கிடைத்துவிட்டது என்ற சந்தோசம் ஒருநாள் கூட நிலைக்காமல்தான் போய்விட்டது.

மானம் காத்திட வேலை தேடிப்போனால், மனம்

விரும்பாத உறவுக்கல்லவா கம்பெனி நிறுவனர் உத்தரவாதம் கேட்டுவிட்டார்...?

அந்த மனிதரின் அருகாமையை..அந்த அலுவலை வேண்டாமென்று உதறத் துடித்தாலும், அந்த மனிதர் தன்னிடம் கெஞ்சிக் கெஞ்சி இன்னும் ஒரு மாதம் மட்டும் வேலை பார்க்கச் சொன்னதை மீண்டும் மீண்டும் சிந்தித்தாள்.

புலி பதுங்குவது ஒரு வேளை பாய்வதற்காகத்தானிருக்குமோ...?

அவர் புலியா... அல்லது மனதிற்குள் மனதை மறைக்கத் தெரியாத வெள்ளை நெஞ்சத்து மனிதரா....? எதை எடுப்பது...? எதை விடுவது...? மீண்டும் மீண்டும் சிந்தித்தும் முடிவு காண முடியவில்லை.

மின்சார வண்டி பரங்கிமலை நிலையத்தில் வந்து நின்றது. இறங்கினாள். தான் குடியிருக்கும் வீட்டை நோக்கி நடந்தாள். நடக்க நடக்க மனம் அன்றைய தினம் கம்பெனி நிறுவனருடன் நடந்த உரையாடல்களையே அசை போட்டது.

நாளை முதல் வேலைக்குப் போவதா வேண்டாமா...?

மனம் கேட்டது.

"ஒரு மாதம்..... இந்த மே மாதம் மட்டும் வேலைக்கு வாருங்கள்..அடுத்த மாதம் பள்ளிகளில் வேலை காலியாகும். அங்கே என் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஆசிரியைப் பணியில் யாரிடமும் கைகட்டி நிற்காமல் கௌரவமாய் வேலை செய்யலாம். ப்ளீஸ்..." என்று யாசிக்கும் பாவனையில் கேட்ட அந்த மனிதர் மனக்கண்ணில் வந்தார்.

பார்க்கலாம்.!

அவர் நம்மிடம் சரியாக இருந்தால் ஒருமாத மென்ன... மற்றொரு பணி கிடைக்கும் காலம்வரை வேலை பார்க்கலாம் என்ற முடிவு அலுவலகத்திலிருந்து வெளிவந்தபோது எழுந்தது போலவே, இப்போதும் அவளுக்குள் மேலோங்கியது.

வேலைக்குப் போவதென்ற முடிவுடன் வீடு நோக்கி நடக்கும்போது தன் வீட்டிற்கருகேயுள்ள மளிகைக்கடை கண்ணில்பட்டது.

இந்த வேலையை நம்பி அந்தக் கடைக்குச் சொந்தக்காரனிடம் கடன் வாங்குவதா...? ஒருவேளை அந்த மனிதர் திரும்பவும் தன்னை அழைத்து வைத்து என்னைக் கட்டிக்கொள்ள கசக்கிறதா? என்று ஒருபடி அதிகமான தைரியத்துடன் புறப்பட்டுவிட்டால் அந்த நிமிடமே வேலையைத் தூக்கி எறிந்து விட்டு வரவேண்டுமே... அப்பொழுது மளிகைக்கடைக்காரக்கு எப்படி பணம் தருவது...? சிந்தனையுடன் வீட்டருகே வரும் பொழுது வலது கழுத்தைச் சாய்த்து இடது கையால் பின் கழுத்தில் அழுக்கு உருட்டினால். தன் கழுத்தில் மரியாதையே இல்லாமல் உராய்ந்து கொண்டிருக்கும் தாலி சங்கிலி அழுத்தமாய் விரல் நுனிகளில் அழுத்தியது.

திடுப்பென ஒரு மன மின்னல்...!

இந்தப் பொற்றாலி என் கழுத்திற்குத் தேவையே இல்லாத ஒன்று. இதை விற்று...சின்னதாய் ஒரு சங்கிலியை வாங்கி அணிந்து கொண்டு, மீதிப்பணத்தை வைத்து செலவு செய்யவேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது. வீட்டிற்கு வந்தாள். அடுப்பைப்பற்ற வைத்து காபி கலந்து காபி சாப்பிட்டாள். சமையல் வேலைகளில் ஈடுபட்டாள்.

- தொடரும்..........




**S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A**

**Correspondent**

**Koilpillai Mat.Hr.sec.School**

**65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.**

**Ph:044-22492489. 22492286, Cell:9840715246.**

**Email:samuelathisayaraj@gmail.com**

**விலைகுறைவு!** **R.Suresh Ph: 2226 6961, 22266962** **மனநிறைவு!**

# AMUTHA & CO



**Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells**



**1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.**

**விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்**

**திருமண தகவல் மையம்**

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)



**சூட்சுமம் தெரிந்தால் வெற்றி!**

போட்டி என்று வந்து விட்டால் புத்திசாலித்தனமானச் செயல்பாடுதான் வெற்றிக்கு வழி வகுக்கும். இருட்டில் இருப்பவன் வெளிச்சத்துக்கு வரவேண்டும் என்றால் அதற்குத் தேவை முயற்சி. விடியாத இரவே கிடையாது. அதுபோல் முடியாத செயலே கிடையாது. முனைப்போடு விடாமுயற்சியை கைக்கொண்டால் முடியும். நிழலின் அருமை வெயிலின் கொடுமையில் தான் தெரியும். அதுபோல நமது விடா முயற்சி தன்னம்பிக்கையின் அருமை வெற்றியில்தான் தெரியும்.

பரசுராமரின் தந்தை ஜமதக்னி முனிவர் சிறந்த தவ வலிமை மிக்கவர். ஒரு கோடை காலத்தில் ஜமதக்னி முனிவர் ஆற்றங்கரையில் குளித்து முடித்து காலை பூஜை, புனஸ்காரம், மந்திரங்கள் சொல்லி முடிக்கும் பழக்கம் உள்ளவர். அப்படிப்பட்ட தீவிர பக்தரான ஜமதக்கினி முனிவர் தமது பூஜையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொழுது கணவரின் பூஜை முடியும் வரை அவரது மனைவி ரேணுகாதேவி சற்று தள்ளி நின்றிருப்பார். கணவர் பூஜை முடியும் வரை அந்த இடத்தைவிட்டு அசையமாட்டார்.

கோடைகாலம் என்பதால் சூரியன் உக்கிரம் தகிக்க ஆரம்பித்தது. ஆற்றங்கரை மணல் சூடேறிக் கொதித்தது. ரேணுகா தேவியால் நிற்க முடியவில்லை. சூடு பொறுக்காமல் காலை மாற்றி மாற்றி வைத்தார். சூரியனின் தாக்கம் தலையில் இறங்க அவருக்குத் தலைசுற்ற ஆரம்பித்து மயங்கி விழுந்தார். பூஜையை முடித்துவிட்டு உச்சிப்பொழுது நேரம் வந்த ஜமதக்னி முனிவர் மனைவி மயங்கி கிடப்பதைப் பார்த்தார். பதறி ஓடி மனைவியைத் தூக்கினார். கமண்டல நீரை முகத்தில் தெளித்து மயக்கம் தெளிய வைத்தார். சற்று தெளிச்சி அடைந்த ரேணுகாதேவி மலங்க மலங்க விழித்தபடி கணவரைப் பார்த்தார். "முனிவர் மனைவியிடம் என்ன ஆயிற்று?" என்று விபரம் கேட்டார்.

அம்மையார் ஆகாயத்தில் இருந்த சூரியனைக் காட்டி வெயிலின் கொடுமை என்னால் தாள முடியவில்லை. தலையில் உச்சி வெயிலின் தாக்கம் மயங்கி விட்டேன். சூடான மணலில் நின்றதால் பாதங்கள் கொப்பளித்து விட்டதைக் காட்டினார். ஜமதக்கினி முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது. சூரியனை உக்கிரமாகப் பார்த்தார். தன்னிடம் இருந்த வில்லை எடுத்து அஸ்திரத்தை தொடுத்து சூரியனைக் குறிபார்த்தார்.

அஸ்திரத்தைப் பிரயோகிக்காமல் சூரியனையே குறிபார்த்தப்படி இருந்தார். சூரியன் உடனே ஒரு அந்தணர் வடிவில் கீழே வந்து ஜமதக்கினி முனிவரை வணங்கி தவசிரேஷ்டரே சூரியனைத் தாங்கள் தாக்க வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்க. முனிவர் கவனத்தை வில்லிலிருந்த அஸ்திரத்தின் மேல் வைத்தபடி "சூரியன் தன் வெப்பத்தால் என் மனைவியைக் கொடுமைப்படுத்தி விட்டான்.

அதற்குத்தான்?" என்று கூற அந்தணன் உடனே "சூரியன் அவனது கடமையைத் தானே செய்கிறான். வெயிலின் வெப்பம் தானே பூமிக்கு ஜீவாதாரம். அப்படியிருக்க நீங்கள் அவனது கடமையைக் கொடுமையாகப் பாவிப்பது எப்படி நியாயமாகும்?" என்று கேட்டான். அதற்கு முனிவர் "என் மனைவி மட்டுமல்ல பூமியில் வாழும் மக்களும் இந்த வெயிலின் கொடுமையால் பாதிக்கப்படுகின்றனர்."

அதனால் சூரியனைத் தண்டிக்கப் போகிறேன்' என்று சொன்னார். "தவவலிமை படைத்த முனிவரே வேதங்கள் அனைத்தும் கற்றுணர்ந்த தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இருந்தாலும் சூரியன் தன்பாதையில் நகர்ந்து கொண்டிருக்கும் பொழுது உங்களால் எப்படிக் குறிப்பார்த்து அஸ்திரம் எய்ய முடியும்?" என்று கேட்டான் அந்தணன்.

அதற்கு ஜமதக்கினி சிரித்தபடி சூரியன் தன் பாதையில் நகர்ந்து கொண்டே இருந்தாலும் ஒரு நாளில் 24 மணி நேரத்தில் சூரியன் தனது பயணத்தை நிறுத்தி ஒரு கணப்பொழுது அசையாமல் இருப்பான். அந்த ஒரு கணப்பொழுதை எதிர்பார்த்து நிற்கிறேன். சூரியன் அசைவற்று நிற்கும் அந்தக் கணத்தில் என் வில்லில் இருந்து செல்லும் இந்த வலிமை மிகுந்த அஸ்திரம். சூரியனைத் தூள்தூளாக்கி விடும்' என்று சொன்னார். சூரியன் அதிர்ச்சியடைந்து வேறு வழியில்லாது ஜமதக்னி முனிவரின் பாதத்தில் விழுந்து வணங்கி. தான் சூரியன் என்பதை அவருக்குத் தெரியப்படுத்தி மன்னிப்புக் கேட்டார். முனிவரும் கோபம் தணிந்து சூரியனை மன்னித்தார்.

பிறகு "நீ உன் வெயிலின் வெப்பத்தைத் தணித்துக் கொள் என்றார்" அதற்குச் சூரியன் உடனே, "மேகக்கூட்டம் என்னை மறைப்பது போல் ஒரு சிறு குடையால் என் வெப்பத்தைத் தலையில் விழாமல் மறைக்க முடியும். காலில் பாதுகை அணிந்து கொண்டால் என் வெப்பம் பாதத்தைத் தாக்காது" என்று கூறி குடையும் பாதுகையும் அவருக்கு வழங்கிவிட்டு தன் கடமையைச் செய்யச் சென்றான்.

இதுதாங்க புத்திசாலித்தனம் போட்டியில் வெற்றியைத் தரும். ஜமதக்கினி முனிவர் சூரியனின் சூட்சுமத்தைத் தெரிந்து செயல்பட்டார். வென்றார்.


வாழ்க வளர்க ! உ

வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அனுகலாம் வாங்க !!



ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

ரியல் எஸ்டேட்



M.L. சுவாமி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.

Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures



SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு

**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**

E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com




# உன் சிந்தனை உனது வெற்றி

**விழுந்தாலும் முன்னோக்கி விழு**

"இலட்சியம் ஆசை, விருப்பம், இவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால் உடல், பொருள், ஆவியால் வளர்க்கப்படுவது இலட்சியம் நிமிடத்திற்கு நிமிடம் தோன்றி மறைவது ஆசை. துன்பத்தைக் கண்டவுடன் காணாமற் போவது விருப்பம். இவற்றில் மனிதனுக்கு வேண்டியது இலட்சியமே" என்பார் ஆதிசங்கரரின் சீடர் இராமதீர்த்தர்.

"முயற்சி உடையவன் செல்வத்தை அடைகிறான். நல்ல உணவு உண்பவன் ஆரோக்கியத்தை அடைகிறான். நல்ல ஆரோக்கியத்தை உடையவன் சுகத்தை அடைகிறான். நல்ல ஒழுக்கமுள்ளவன் புகழ், செல்வம், இவற்றை அடைகிறான். நல்ல இலட்சியம் உள்ளவன் தன் வெற்றி இலக்கை அடைகிறான்" பகவத் கீதை.

உங்கள் உள்ளத்தை வைத்தே உங்களை உலகம் மதிப்பிடுகிறது. நாள்தோறும் சிவபெருமான் மீது கல்லை விடாமல் எறிந்தார் சாக்கியர். அவர் நாயனார் என்று மதிக்கப்பட்டார்.

சிவபெருமான் மீது ஐந்து மலர்களை வீசினான் மன்மதன். அவன் எரிக்கப்பட்டான்! ஏன்? காரணம் இரண்டுக்கும் பின்னால் இருந்த மனம்.

சிவபெருமானை வணங்க நினைத்துக் கல்லை எறிந்தார் சாக்கியர். அந்த சிவனை காம வயப்படுத்த மலர்களை வீசினான் மன்மதன். செயல்களின் பின்னால் உள்ள மனம்தான் அளக்கப்படுகிறது.

எவன் ஒருவன் வெல்ல முடியாத தீர்மானத்துடன் நல்லவற்றைத் தேர்ந்து எடுக்கிறானோ, எவன் ஒருவன் எரிச்சலூட்டும் கவர்ச்சிகளை, உள்ளும் புறமும் எதிர்த்து நிற்கிறானோ, எவனொருவன் கடுஞ்சோதனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்கின்றானோ, எவனொருவன் மனப்புயலில் அமைதியுடனும் அச்சுறுத்தலின் போதும் கடுகடுப்பின் போதும் பயமற்று இருக்கிறானோ, எவன் ஒருவன் தன்னுடைய நம்பிக்கை, உண்மை, நேர்மை, முதலியவற்றில் தடுமாற்றம் இல்லாமல் இருக்கிறானோ, அவன்தான் இலட்சிய மனிதனாக கருதப்படுவான். அவன் தன் திறத்தை வெளிக் காண்பித்து திடமான தெளிவான முடிவை அடைவான் என்கிறார் கிரேக்க உளவியலாளர் மற்றும் தத்துவஞானி டபுள்யூ இகேனிஸ்.

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**



மனிதராகிய நாம் புத்துயிர் பெற வேண்டுமானால், புத்துயிர் பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அந்த நம்பிக்கையை செயலில் கொண்டு வர வேண்டும். அந்தச் செயலோ மற்றவர்க்கு நலம் பயப்பதாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை கொண்ட மனிதனே சிறந்த இலட்சியம் உடையவனாகக் கருதப்படுவான். மாஜினி - இத்தாலிய புரட்சிக்கவிஞன்.

'விழுந்தாலும் முன்னோக்கி விழு' என்பார்கள். விழுகிற ஒவ்வொரு முறையும் உடனே எழுந்து கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் எழ முடிகிறவனை அசைத்துப் பார்க்கும் திறன் உலகில் எதற்கும் இல்லை.

**நிகழ்காலத்தை வெற்றி கொள்ளுங்கள்**

வயிறு பசித்தால் உடனே உணவுண்டு பசி தீர்க்கிறோம். அதுதான் அந்தப் பிரச்சனைக்கு தீர்வு. அது கேவலமும் இல்லை. உணர்வு சார்ந்த, மனம் சார்ந்த பசிக்கு அத்தனை சுலபமாக தீர்வு கண்டுவிட முடியாது.

அந்நிலையில் ஊக்கமளிக்கக்கூடிய மனிதர்களின் கூட்டுறவை நாட வேண்டும். தன்னம்பிக்கையூட்டும் புத்தகங்களை தேடிப்பிடித்து வாசிக்க வேண்டும். வரலாற்று நூல்கள் மற்றும் தன் வரலாறுகள் தேவையான உந்து சக்தியை அளிக்கும்.

அவை உங்களுடைய எண்ணங்களையும் மனோபாவங்களையும் ஆரோக்கியமாக வைக்கும். நாம் எத்தனை எச்சரிக்கையாக இருந்தாலும் சமயத்தில் தோற்க நேரிடுகிறது.

சாதாரண வெற்றி கை நழுவிப் போகும்போது நீங்கள் மனதுக்குள் எண்ண வேண்டியது "இதைவிடப் பெரிய வெற்றியை நான் பெறப்போகிறேன்" என்று ஏறுவதற்கு அஞ்சினால் எப்படி சிகரத்தை அடைவது துணிவுடன் அடுத்த அடியை எடுத்து வையுங்கள். வெற்றி தொலைவில் இல்லை, இதோ மிக அருகில்!

"முதலில் உன் மீது நம்பிக்கை
அடுத்து மற்றவர்கள் மீது நம்பிக்கை"

உங்களுடைய சொல்லிலும், செயலிலும், தோற்றத்திலும் எப்போதும் ஒவ்வொரு நிமிடமும் நம்பிக்கை வெளிப்பட்டு கொண்டே இருக்க வேண்டும். (தொடரும்)

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-6

டாக்டர் ஆ.தசரதன் 9444167603.

கி.1575 முதல் 1675 வரை வாழ்ந்ததாகக் கூறப்பெறும் மானவீரவளநாடனான அருதனக்குட்டிப் புலவருடைய வில்லுப்பாட்டு ஆவணங்களிலிருந்து செண்பக நாடாட்சியார் கூட்டத்தாரையும் பெருமாள்சாமித் தம்பிரான் கூட்டத்தாரையும் இந்தியன் நாடார் முரசின் கடந்த இரு மாத இதழ்களில் பதிவிட்டிருந்தேன். இக்கூட்டத்தார் மானாட்டார் அல்லர் என்பதும் அறியப்பட்டுள்ளது. இவ்விரு ஆவணங்களும் கி.பி.1617, கி.பி.1623ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டவை.



பல்லாயிரக்கணக்கான இக்கூட்டத்தாரில் சிலர் அந்திரமுடையார் என்ற சான்றோர்குல வீரரைச் சாமியாக வழிபட்டுவருகிறார்கள் என்பதையும் இந்த வீரரின் வரலாற்றையும் புலவர் அருதனக்குட்டியாரே ஏறத்தாழ 1630 ஆம் ஆண்டு வாக்கில் பாடி ஆவணப்படுத்தியுள்ளார் என்பதையும் இனி அறிந்து கொள்ளலாம்.

பழநியிலிருந்த செண்பக நாடாட்சியார் அம்மையைத் திசை நோக்கித் தொழுது களக்காடு அருகே எருக்கலை வெட்டி (எருக்கலம்பட்டி) என்ற ஊரில் மாடநாடாரும் பொன்னிலங்கி அம்மையாரும் பெற்றெடுத்த புதல்வரே அந்திரமுடையார் ஆவார். செண்பக நாடாட்சியார் பழநியிலிருந்து மானாட்டுத் தாங்கையூருக்குக் குடிபெயர்ந்ததற்கு முன்பாகவே அந்திரமுடையார் பிறந்துள்ளார். பதினாறாம் வயதில் களக்காடு வட்டார ஒன்பது ஊர்களில் மணியம் செய்யும் உரிமையைத்திருச்சி அரண்மனையார் சார்பாகப் பெற்றுள்ளார். கரிகாலன் என்ற தம் தாய்மாமன் மகளை முதலில் மணந்துள்ளார். அந்த அம்மையாரின் அகால மரணத்திற்குப்பின் வள்ளியூர் மடத்து அந்தணர் மகளை மணந்துள்ளார்.

திருமணநாள் இரவில் வள்ளியூரைக் கொள்ளையடிக்க வந்திருந்த பிரான்மலைக் கொள்ளையரைத் தனியொருவராக நின்று விரட்டி அடித்துள்ளார். இச் சாதனைக்காகவே அவரைச் செண்பக நாடாட்சியார் வழிபாடு கூட்டத்தார் சிலர் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். வள்ளியூர் மக்களைக் காப்பாற்றியவர் அல்லவா!

களக்காடு வட்டாரச் சான்றோர் குலத்தினர் விசயநகரத்தார் சார்பில் மணியம் செய்யும் உரிமையைப் பரம்பரை பரம்பரையாகப் பெற்று வந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த நடைமுறை ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. அந்திரமுடையாரைத் "தாலிக்குவேலி" என்ற பட்டத்துடன் அழைத்துள்ளனர். நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சான்றோர் குல வீரரும் மணியம் செய்த அலுவலருமான இவருடைய இளமைப் பருவ வரலாறே வில்லுப்பாட்டு ஆவணமாக மானவீரவளநாடனான அருதனக்குட்டிப் புலவரால் பாடப்பெற்றுள்ளது. அதன் பின்னரான வரலாறு இன்னும் தெரிந்திலது. அந்திரமுடையாரின் சமாதி திருக்குறுங்குடி ஏர்வாடிப் பகுதியில் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் இதைப் பள்ளிப்படையாக அந்திரமுடையாரை வணங்குவோர் கண்டு வழிபடுவதாகத் தெரியவில்லை.

செண்பக நாடாட்சியார் பள்ளிப் படைக்கோவில் அமைந்துள்ள மானாட்டுத் தேரியூர் தாங்கையீரில் தொட்டில் வழிபாடே அந்திரமுடையாருக்கு அமைந்துள்ளது. வேறு இடங்களில் கட்டிலில் படையல் வைத்தும் வழிபடுகிறார்கள். அவர் குதிரையில் அருவாள், அல்லது வாளுடன் பயணித்துள்ளதுபோல் தற்காலத்தில் உருவம் சமைத்தும் வழிபடுகிறார்கள்.

அந்திரமுடையார் தன்னைச் சம்சாரி என்றும் சேவகன் என்றும் அடையாளப்படுத்திக்கொள்வதாக அருதனக்குட்டியார் பாடியுள்ளார். ஓர் இடத்தில் இவரை "நாடான்" என்று பட்டமிட்டு அடையாளப்படுத்துகிறார். மற்றொருஇடத்தில் "பத்திரகாளிபுத்திரன்" என்று அந்திரமுடையாரை அழைக்கிறார். "உடையார்" என்ற பட்டப்பெயருடன் விளங்கும் அந்திரமுடையாரின் பூர்வீகம் பிற்காலச் சோழர்கள் காலத்துக்கு இட்டுச் செல்கிறது.

பத்திரகாளி புத்திரர்கள் எனும் படைவீரர்களில் சிலர் "உடையார் படைக் கொங்கவாளர்" என்று அழைக்கப்பட்டுள்ளனர். கொங்கவாளர் என்னும் ஒரு படைப்பிரிவு பழநியில் இருந்ததாகக் கல்வெட்டுச் சான்று உள்ளது.

பழநிக் கல்வெட்டு ஒன்று கி.பி.6 ஆம் நூற்றாண்டில் வட்டெழுத்தில் அமைந்துள்ளது. இதில் "செண்பகக் குட்டி" என்ற பெயர் இருப்பதாகத் தொல்லியல் துறை அறிஞர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் அண்மையில் என்னிடம் தெரிவித்தார். செண்பக நாடாட்சியார் பழநியிலிருந்தே தென்பாண்டி நாட்டுக்குக் குடிபெயர்ந்துள்ளார். அந்த அம்மையாரின் வரலாற்றைப் பாடிய அருதனக்குட்டிப் புலவர் அந்த அம்மையாரின் கூட்டத்தாரில் ஆதித்தசோழன் காலத்தில் சங்கரக்குட்டி, ஆதித்தகுட்டி எனும் மூதாதையர் திருவோத்தூர்ப்பகுதியில் (திருப்பனையூர்) இருந்ததாக அடையாளங்கண்டுள்ளதாக நான் செண்பக நாச்சியார் கதைப்பாடலில் குறிப்பிட்டுள்ளேன்.

இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது செண்பக நாடாட்சியார் கூட்டத்தார்க்கு மிகப் பழங்காலத்திலிருந்தே வரலாறு இருப்பதாகத் தெரியவருகிறது. அதைப்போன்றே அந்திரமுடையாரை வழிபடும் கூட்டத்தார்க்கும்

பழங்காலத்திலிருந்தே வரலாறு உள்ளது. ஆயினும் இக்கூட்டத்தார் பல்லாயிரக் கணக்கில் இருந்தும் தம் வரலாற்றையும் பூர்வீகப் பெருமைகளையும் முழுமையாக ஆராய்ந்து வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

அந்திரமுடையாரை வழிபடும் கூட்டத்தார் முதலில் தாங்கையூரில் வழிபட்டு வந்தனர். பின்பு வெவ்வேறு ஊர்களுக்குக் குடிபெயர்ந்ததாலும் தொழில் செய்யச் சென்றதாலும் அவ்வவ் ஊர்களிலும் அவரை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

தாங்கையூர், நவ்வலடி, குமரிமாவட்டம், விருதுநகர் மாவட்டம், மதுரை மாவட்டம், தேனி மாவட்டம், தென்காசிமாவட்டம் போன்ற பகுதிகளில் அந்திரமுடையாரை வழிபட்டுவருகின்றனர். தொட்டில் வழிபாடு, கட்டில் வழிபாடு, பீடவழிபாடு, உருவவழிபாடு எனப் பலவாக அவர் வழிபடப் பெற்றுவருகிறார்.

மானாட்டில் தொடங்கிய இவ்வழிபாடு இன்றைய நாளில் பல்லாயிரக்கணக்கான அவர் பக்தர்களால் பல ஊர்களில் நடந்து வருகிறது. குறிப்பாக, சுண்டங்குளம், திருவில்லிபுத்தூர், சிதம்பரபுரம், கவர்குளம், தென்காசி, தேனி போன்ற பகுதிகளில் தொடர்ந்து அந்திரமுடையாரைச் சிறப்பாக வழிபட்டு வருகின்றனர்.

அந்திரமுடையாரின் வரலாற்று ஆவணத்தை வெளியிட முன்பாகவே முயற்சி செய்து அண்மையில் தான் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் செண்பக நாச்சியார் கோவில் வளாகத்தில் வெளியிட்டேன். இந்த வெளியீட்டுக்கு முழுக்க முழுக்க உதவி திருவில்லிபுத்தூர் அரிசி ஆலை உரிமையாளர் திருவாளர் செந்தில் அவர்களையும் அவர் குடும்பத்தார்களையும் பிற நண்பர்களையும் நன்றியுடன் நினைவுகூர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

“மானாடும் மானாட்டாரும்” என்ற தலைப்பிலான இத்தொடர் கட்டுரைகளில் மானாடு தொடர்பாகச் சில பதிவுகளை முதலில் பதிவிட்டபின்னர் மானாட்டார் என்போர் பற்றி எழுதவிருக்கிறேன்.







**ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்**

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**

**செல்9445171819, 044-22253484.**

2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.



# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

பிற்காலச் சோழர்கள்

தொகுப்பு: கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.

**சோழரின் தொன்மை:**

1.சங்க காலத்திற்கு பிந்தைய சோழர் ஆட்சியில் சோழ நாட்டை ஏறத்தாழ 20 சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளார்கள். சோழர் ஆட்சியை சங்க காலத்திற்கு முந்தைய ஆட்சி கடைச் சங்கத்து இறுதிக் காலத்திற்கும் பிற்காலச் சோழர் ஆட்சியின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட சோழர் நிலை என்று மூன்று பிரிவாக எடுத்துக் கொள்ளலாம்.

வடவேங்கடம் தென்குமரிக்கு இடையேயுள்ள நிலப்பரப்பு முற்காலத்தே தமிழகம் என்று வழங்கப் பெற்றது. இனி சோழர் என்பார். நம் தமிழகத்தின் கீழ்ப்பகுதியாக சோழ மண்டலத்தைத் தொன்று தொட்டு ஆட்சி புரிந்து வந்த அரச மரபினர் ஆவர். இவர்கள் எக்காலத்து இதனை ஆட்சி புரியும் உரிமை எய்தினாரென்றதால், எவ்வேந்தரால் இதன் ஆட்சி முதலில் கைக் கொள்ளப்பட்டதென்பதை அறிந்து கொள்ளக்கூடவில்லை, இராமாயண, பாரத காலங்களிலும் அவற்றிற்கு முந்திய நாட்களிலும், இவர்கள் மிகச்சிறப்புடன் விளங்கியுள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அன்றியும், கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், மகத நாட்டில் செங்கோல் செலுத்திய அசோகச் சக்கரவர்த்தியின் ஆணையை உணர்த்தும் கல்வெட்டுக்களிலும் சோழரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கிரேக்கரும் உரோமரும் மிக உயர் நிலையிலிருந்த நாட்களில் நம் சோழரும் அவர்களுடன் வாணிகத் தொடர்புடையவர்களாய்ப் பெருமையோடு வாழ்ந்து வந்தனர் என்பது தெளிது.

இத்துணைத் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சோழர் குடியினர் வளம் நிறைந்த சோழ மண்டலத்தைத் தமக்குரியதாகக் கொண்டு பண்டையக்கால முதல் ஆட்சி புரிந்து வந்தமை பற்றி வளவர் என்றும் வழங்கப் பெற்றனர். இவர்களது நாடு வானம் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியால் வளம் பெற்றும் சிறப்பெய்தியிருந்தமையால் காவிரி நாடு எனவும் பொன்னி நாடு எனவும், அறிஞர்களால் பாராட்டப்பட்டது. நில வளமும் நீர்வளமும் ஒருங்கே அமைந்துள்ளமையால் இதன் நெல்விளைவு எந்த நாட்டினரும் புகழ்ந்து கூறும் இயல்புடையதாகும். "நெல்லுடையான் நீர் நாடார்கோ" என்ற பழம் பாடல் பகுதியும், 'மேதக்க சோழ வள நாடு சோறுடைத்து' ஔவைப்பிராட்டியரது திருவாக்கும், நெல்லுடைமையால் குடியுயர்தலும், குடியுயர்தலால் கோன் உயர்தலும் இயல்பேயாம் ஆக "வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்னும் முதுமொழியில் செல்வத்தின் மேல் எல்லைக்கோர் எடுத்துக் காட்டாகச் சோழர் குடியினர் கூறப்பெற்றிருப்பது செல்வவளம் பற்றி மூவேந்தருக்குள்ளும் முதல் வேந்தராய்த் திகழ்ந்தவர் இவர்களே என்கிறார் பண்டாரத்தார். சோழர் குடியினர் சூரிய குலத்தினர் என்பது சங்கத்து சான்றோர் கருத்தாகும், செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் (அவ்வாறே) அங்ஙனமே அறிவிக்கின்றன.

இவர்களது கொடியும், இலச்சினையும் புலியுருவம் பொறிக்கப் பெற்றவையாகும். ஆத்திமாலையே இவர்கட்குரிய அடையாள மாலை என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவர்கள் வீற்றிருந்து செங்கோல் செலுத்தும் பேறுபெற்ற திருவுடைய நகரங்கள், உறையூர் காவிரி பூம்பட்டிணமும், கங்கை கொண்ட சோழபுரம் பறையாறை நகர் என்பன.

உறையூரும், காவிரிப் பூம்பட்டிணமும், சங்க காலச் சோழ மன்னர்கட்குத் தலைநகரங்களாக விளங்கிய சிறப்புடையவை. தஞ்சாவூரும் கங்கை கொண்ட சோழபுரம் பிற்காலச் சோழ அரசர்கட்குத் தலைநகரங்களாக விளங்கிய பெருமை வாய்ந்தவை. பழையாறை நகர் சோழர் பல்லவர்க்குக் கீழ்ச் சிற்றரசராயிருந்த காலப் பகுதியில், வாழ்ந்து வந்த இடமாகும், பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தும் இம்மாநகர் சோழரது இரண்டாவது, தலைநகராய்ச் சிறப்புடன் நிலவியமை அறியற்பாலதாம். (தொடரும்)



அகில இந்திய நாடார் பேரவை தலைவர் அண்ணாச்சி சின்னதுரை நாடார் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி என்டிஆர் பவுண்டேஷன் சார்பாக வணங்குகிறோம்.





தமிழ்நாடு அரசு வழங்கும் பல்வேறு தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வழங்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரில் வழங்கும் நல்லாசிரியர் விருது 2022-2023 வருடத்துக்கு இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி தர்ஹா அருகில் பிச்சை மூப்பன் வலசை அரசு நடுநிலைப்பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரியை திருமதி சீதாலெட்சுமி அவர்கள் க/பெ.எல்.பி.மகேந்திரன் பிஎஸ்என்எல் இவர்கள் சென்னையில் மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் 5.9.2023ம் நாள் விருது வழங்கினார்கள். மற்றும் தினமலர் நாழிதழ் சார்பில் வழங்கும் லட்சிய ஆசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு இருக்கும் திருமதி.சீதாலெட்சுமி மகேந்திரன் அவர்கள் இன்னும் பலவிருதுகள் பெற்று பல்லாண்டு வாழ்க வளமுடன் என்று இந்தியன் நாடார் முரசு வாழ்த்துகிறது. இவர் நாடார் முரசு கீழக்கரை முருகேசன் தம்பி மனைவி ஆவார்.







என்டிஆர் பவுண்டேசன் என்ற அமைப்பு தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. இவர்கள் வசதிஇல்லாத ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவியும் செய்துவருகிறார். இந்த அமைப்பின் சார்பில் சமீப காலமாக ஜூம் மீட்டிங் நடத்தி பல தேவையான செய்திகளை மக்களுக்கு கூறி வருகிறார்கள். அந்த வகையில் கடந்த வாரம் நடந்த ஜூம் மீட்டிங் வாயிலாக லெப்டினல்கேனல் மனோகரன், அவர்கள் இராணுவத்தில் சேருவது எப்படி என்பது பற்றி விரிவாக கூறினார்கள். காவல்துறை அதிகாரி ஜான்கென்னடி அவர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் பயிற்சி கொடுத்தார்கள். விழாவை முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி.இராதிகா செல்வி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தார்கள். தலைவர்-ஜே.அர்னால்டுஅரசு, செயலாளர்.திரு.பாலகிருஷ்ணன், பொருளாளர் திரு.கௌதமபாண்டியன், அமைப்பாளர் திரு.வீரக்குமார் மற்றும் பலர் முன்னிலை வகித்து நிகழ்ச்சியை வழி நடத்தினார்கள். நன்றி ஜே.அர்னால்டுஅரசு- 9382826686.

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

**உணவு உலகத்து அதிசயங்களும்... ஆச்சரியங்களும்...**

குலோப் ஜாமுனின் தாயகம் அரேபியா. அங்கிருந்து மொகலாய மன்னர்கள் மூலம் இந்தியாவிற்கு அறிமுகமானது. சுல்தான்கள் விரும்பி அதை சுவைத்தார்கள். வெகுகாலம் 'மன்னருக்கான உணவு' என்ற முத்திரை குத்தப்பட்டு, அரண்மனைகளுக்குள்ளும், அந்தப்புரத்திலும்தான் குலோப் ஜாமூன் பரிமாறப்பட்டிருக்கிறது. அது மக்கள் உணவாக மாற வெகுகாலம் ஆகியிருக்கிறது. இப்போது குலோப் ஜாமூன் இந்திய மக்கள் விரும்பி சாப்பிடும் உணவுகளின் பட்டியலில் உச்சத்தில் இருக்கிறது.

மன்னராட்சி காலத்தில் ஒவ்வொரு அரசசபைக்கும் தலைமை சமையல்காரர் இருப்பார். அவருக்கு கீழ் 100-க்கும் மேற்பட்ட சமையல்காரர்கள் பணிபுரிவார்கள். மன்னரையும், அரச குடும்பத்தையும் ருசி மூலம் திருப்திப்படுத்த விதவிதமான புதிய உணவு வகைகளை கண்டுபிடித்து தலைமை சமையல்காரர் அறிமுகம் செய்வார். அது மட்டுமின்றி கப்பல் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று, வெளிநாட்டில் புகழ்பெற்ற உணவுகளை கண்டுபிடித்து கற்று வந்தும் அறிமுகம் செய்வார்கள். மன்னர்கள் நட்பு நாட்டு சமையல்காரர்களை வரவழைத்து தமது நாட்டு சமையலை அவர்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கவும் செய்திருக்கிறார்கள். அதனால் உணவுக்கலையில் இந்தியா பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சிறந்துவிளங்கியிருக்கிறது" என்று விளக்கம் தருகிறார், பத்மசிங் ஐசக் அவர்கள்.

உணவைப்போன்று உணவின் வரலாறும் சுவையாகத்தான் இருக்கிறது!

இப்படி வரலாறுகளை எல்லாம் அவர் கற்று தெளிந்ததால்தான் பத்மசிங் ஐசக்கின் உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனமும் உலக அளவில் தலைசிறந்து விளங்குகிறது!

**பெண்கள் முன்னேற்றத்திற்காக உருவான புதிய தொழில் சிந்தனை!**



## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்



என் மகன் சாதனையாளனாக உருவாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அவனோ படிப்பில் சராசரியாக இருக்கிறான். ஒரு ஆசிரியர் அவனை 'மக்கு' என்று அழைத்திருக்கிறார். அதனை கேட்டு நான் மனம் வெதும்புகிறேன். என்ன செய்வது?

"ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் எல்லா ஆசிரியர்களும் குழந்தைகளின் அறிவுத்திறனை அளக்கத் தெரிந்தவர்களாக இல்லை என்பதற்கு சரித்திர உதாரணங்கள் நிறைய இருக்கின்றன.

20-ம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி ஆல்பிரட் ஐன்ஸ்டின் அவர் பள்ளியில் படித்தபோது ஒரு ஆசிரியர், 'இவனைப் போன்ற மூளை அழுகிய மாணவனை நான் பார்த்ததே இல்லை' என்று தூற்றினார்.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனுக்கு பள்ளி ஆசிரியர் ஒருவர் வைத்த பெயர் 'மர மண்டை' அந்த எதிர்மறையான பெயரை சொன்னதோடு விடவில்லை. பள்ளியில் இருந்தும் எடிசனை வெளியேற்றினார். பிற்காலத்தில் அவர்தான் ஆயிரம் கண்டுபிடிப்புகளுக்கு அதிபதியாக திகழ்ந்தார்.

ஆல்பிரட் ஐன்ஸ்டினை திட்டிய ஆசிரியரும், தாமஸ் ஆல்வா எடிசனை வெளியேற்றிய ஆசிரியரும், பல ஆயிரம் மாணவர்களை பாராட்டி இருக்கவும் செய்வார்கள். ஆனால் அந்த பல ஆயிரத்தில் ஒருவர் கூட சரித்திரத்தில் இடம் பெறவில்லை. அதனால் ஆசிரியர் உங்கள் மகனை மக்கு என்று சொன்னதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம்.

சுதந்திரமாகவும், வித்தியாசமாகவும் சிந்தித்தவர்கள்தான் சாதனையாளராகி இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு (சிறை போல் அல்லாமல்) ஆலயம்போலவும், பள்ளிக்கூடம் (கட்டுப்பாடு நிறைந்த கோட்டைபோல் இல்லாமல்) பூங்கா போலவும் அமையவேண்டும்! அதற்கான சூழலை உருவாக்குங்கள். உங்கள் மகனும் சாதனை படைப்பான்" -ஏ.டி.பத்மசிங் ஐசக். (தொடரும்)







## ஈக்காட்டுத்தாங்கல் நாடார் நலச்சங்கம்

அனைவருக்கும் வணக்கம் 2.10.2023 அன்று பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவு நாள் சங்க தலைவர் பி.அஜய்கோஷ் அவர்கள் தலைமையில் காலை 8.15மணிக்கு சங்கத்தின் சார்பாக அவரது படம் வைத்து மலர் அஞ்சலி செலுத்தி அனுசரிக்கப்பட்டது. அனைவரும் கலந்து கொண்டனர்.

# தவிர்ப்போம் தற்கொலைகளை முழுமையாக

D.M.ஜேம்ஸ் மார்ட்டின், தலைமை எழுத்தர் (ஓய்வு), மாவட்ட நீதிமன்றம், சாமுவேல் மருத்துவமனை வளாகம், திங்கள் நகர், நெய்யூர்-629802, கன்னியாகுமரி மாவட்டம், 9488129050.

1.நாளிதழ்களை புரட்டினாலும், தொலைக்காட்சி பெட்டியை திறந்தாலும் நாம் காண்பது, கடன் தொல்லையால் குடும்பத்துடன் தற்கொலை, அறியா பருவத்தில் அறியாதவனிடம், கைபேசி, ஊடகங்கள் மூலம் பழகி, காதல்வலையில் வீழ்ந்து, கற்பை பறிகொடுத்த மாணவிகளின் தற்கொலை போன்ற தீச்செயல்கள் தான். பெரும்பாலான தற்கொலைகளுக்கு காரணம் காதல் தோல்வி, கள்ளக்காதல் உறவுகள், கடன் தொல்லைகள், ஏமாற்றம் போன்றவைகள். ஆக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தம் என்பது போல், நமது உயிர் நமக்கு சொந்தமல்ல. நம்மை படைத்த இறைவனுக்கே சொந்தம். உயிரை கொடுப்பதும் எடுப்பதும் அவரே. எனவே யாரும், எப்பொழுதும். எக்காரணங்கள் கொண்டும் தற்கொலை செய்து கொள்ள கூடாது. தற்கொலை முயற்சியில் வெற்றி கண்டால் இறைவன் முன் நிறுத்தப்படுகிறோம். நரகத்தில் தள்ளப்படுகிறோம். தோல்விக்கண்டால் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறோம், இந்திய தண்டனைச் சட்டம் 309-வது பிரிவு படி.

2.உலகையே உலுக்கிய சில பிரபலங்களில் தற்கொலைகளிலிருந்து நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ளலாம்.

1.இறைமகன் ஏசுவுக்கு முந்திய காலத்தில் நடந்த தற்கொலை. ரோமாபுரி சக்ரவர்த்தியாக திகழ்ந்தவர் மாவீரன் ஜூலியஸ் சீசர். அவரது உற்ற நண்பனாக, தளபதியாக இருந்தவர் மார்க் ஆன்றனி. தனது பேரழகால், கவர்ச்சிகரமான தோற்றத்தால் இருவரையும் வீழ்த்தி, தனது காலடியில் விழ வைத்து கோலாச்சியவள் எகிப்து நாட்டு எழிலரசி கிளியோப்பட்ரா. இவர்களது வீழ்ச்சிக்கு பின், தான் ஆதரவற்றவளாக ஆக்கப்பட்டதை எண்ணி, அவர்களுடன் தான் வாழ்ந்த சுகபோக வாழ்க்கையை இனி

2.ஏசுவின் காலத்தில் நடந்த மறக்க முடியதா இன்னொரு தற்கொலை. ஏசுவின் பன்னிருசீடர்களில் முதன்மையானவர் சீமோன் பேதுரு. கடைசியானவர் யூதாஸ் இஸ்காரியோத். பேதுருவின் உறுதியை கண்டு, பாறை என்று கூறிய ஏசு, அவரை திருச்சபையின் தலைவராக்கினார். யூதாசிடம் பணப்பொறுப்பை ஒப்படைத்து பொருளாளர் ஆக்கினார். பாறை என்று அழைக்கப்பட்ட பேதுரு, ஒரு சாதாரண பெண்ணிடம் தன் தலைவரையே தனக்கு தெரியாதென்று மறுதலிக்கிறார். பின் மனம் மாறினார். மன்னிப்பு கேட்டார். மன்னிக்கப்பட்டார். பொருளாளராக இருந்த யூதாஸ் பொன்னாசையால் உந்தப்பட்டு, 30 வெள்ளிக்காசுக்காக, தன் தலைவர் ஏசுவையே எதிரிகளிடம் அடையாளம் காட்டினான். பின் மனம் நொந்தான். ஆனால் மனிப்பு கோரவில்லை. வெள்ளிக்காசுகளை வாங்கியவர்களிடமே வீசி எறிந்தான். தனக்கு மன்னிப்பு கிடைக்காதென்ற அவநம்பிக்கையால் தற்கொலை செய்து கொள்கிறான்.

3.ஏசுவின் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு பின் நடந்த மறக்க முடியாத மற்றுமொரு தற்கொலை. நிகழ்காலத்தில், நம் கண்முன் வாழ்ந்தவன் ஜெர்மனியின் சர்வாதிகாரி அடலாப்ஹிட்லர். தனது இரக்க மற்ற கொடுஞ்செயல்களால் கோடிக்கணக்கான அப்பாவி மக்களின் ரத்தத்தால் பூமியை கறைபடச் செய்தவன். சிறு வயதில் தாயன்பில் வாழ்ந்தவன். பள்ளிபருவத்திலே இறை பக்தியுடன் வளர்ந்தான். தாயை இழந்து அனாதையானான். பசி பட்டினியுடன் தெரு ஓரத்தில் வாழ்ந்து வந்தான். முதல் உலக மகா யுத்தத்தில் சாதாரண சிப்பாய். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சாதாரண சிப்பாய். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கே காரண கர்த்தாவானான். ஐரோப்பாவை முழுமையாக வென்றெடுத்தான். அகில உலகத்தேயே தன் அதிகாரத்திற்குள் கொண்டு வர பேராசைப்பட்டான் மண்ணணாசையால் மதியிழந்தான். தோல்வி கண்டான். வெற்றிபெற முடியாதென்ற அவநம்பிக்கையால் தற்கொலை செய்து கொண்டான்.

3.செல்பி, முகநூல் யூடியுப் போன்ற ஊடகங்களால் சிறு வயதிலே முன்பின் அறியாத ஆடவர்களுடன் பழகி, காதல் வலையில் சிக்கி சீரழிந்து, கற்பை பறிகொடுத்து, தற்கொலை செய்து கொள்ளும் சிறார்களை இன்று காண முடிகிறது. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க குழந்தைகளை சிறு வயதிலிருந்தே நல்லொழுக்கத்திலும், இறைபக்தியிலும்வாழக் கற்று கொடுப்பது நல்ல பெற்றோர்களின் கடமை. இளசுகளின் மனதில் தன்னம்பிக்கையும், உறுதியையும் ஊட்ட வேண்டும்.

கடன் தொல்லைகளால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்பவர்களைப்பற்றியும் அன்றாட நாளிதழ்களில் காண்கிறோம். குடும்ப வருமானத்தை கணக்கிட்டு, வீண் ஆடம்பர செலவுகளை தவிர்த்து, குடும்ப செலவை வருமானத்திற்குள் சுருக்கி கொள்வது நல்ல குடும்ப தலைவிகளின் கடமையாகும். "50 ரூபா சம்பளக்காரன் பொண்டாட்டி 80 ரூபா சேலை கேட்கக் கூடாது" , என்று நகைச்சுவையுடன் பாடி சிந்திக்க வைத்தார், கலைவாணர் அன்று. "வாடகை சோபா 20ரூபா, விலைக்கு வாங்கினால் 30தே ரூபா என்பது இன்று வரவு 8 அணா செலவு 10அணா என்பது போல் இருக்கக் கூடாது.

4.எத்தனை துன்பங்கள் வந்தாலும் துணிவேதுணைஎன்ற மனப்பான்மையுடன், முழு நம்பிக்கையுடன் வாழ்ந்தால் தற்கொலைகளை தவிர்க்கலாம். மண், பொன், பெண் ஆசைகளை தவிர்த்து, மனித நேயத்துடன் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். "போதுமென்ற மன்றமே பொன் செய்யும் மருந்து", என்ற தத்துவத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும். தற்கொலைகளை தவிர்ப்பதற்கு மருந்தோ மாத்திரைகளோ கிடையாது. ஒழுக்கம், உறுதி, தன்னம்பிக்கை இவைகளால் தான் தற்கொலைகளை தவிர்க்க முடியும்.

கவர்ச்சி, வெளிவேசம், ஏமாற்றுதல் போன்ற போலிகளிலிருந்து விடுபட்டு, பழிவாங்குதல், உடல் இச்சை, பொருந்தா காதல், குடிவெறி போன்ற தீய பழக்கங்களை தவிர்த்து நேர்மை, தூய்மை, பொறுமை, அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்ற நற்குணங்களை இதயத்தில் இருக்க செய்யவேண்டும். மன்னிப்பு கோரினால் மன்னிக்கப்படுவோம். அவநம்பிக்கையை வெளியேற்றினால் நம்பிக்கை உள்ளே வரும். தூய ஆவியின் வல்லமையால் சோதனைகளை வெல்வோம். ஒழுக்கமுடன் வாழ்வோம். தற்கொலைகளை தவிர்ப்போம். முழுமையாக

யானைக்கு தும்பிக்கை
மனிதனுக்க நம்பிக்கை - தொடரும்...........

## நாடார் முரசு பிறந்த கதை

ஜாதிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்றும் ஜாதிகள் இல்லை என்றும், எல்லோரும் சமம் என்றும் பலரும் பலவிதமாக காலா காலமாக சொல்லிக் கொண்டும், அதற்காக பல செயல்களை செய்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் ஜாதிகள் இல்லா சமுதாயத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாது ஏனெனில் உலக ஆரம்ப காலத்திலிருந்தே உயர்வு தாழ்வு என்ற வாழ்க்கை முறை இருக்கத்தான் செய்கிறது ஆனால் ஆரம்ப காலத்தில் அவரவர் தரத்திற்கு சார்ந்தார் போல வாழ்க்கை முறை இருக்கிறது. ஆனால் ஜாதி வெறியை தூண்டி பல சுயநலவாதிகள் ஆதாயம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜாதிகளின் நல்லிணக்கத்தை வலியுறுத்தி ஒவ்வொரு ஜாதியினரையும் நட்புப் பாராட்டி மனித நேயத்தோடு நடத்த ஆரம்பித்தால் சமுதாயம் ஒரு உயர்நிலையை அடையும். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட தற்போதைய ஜாதி வெறி இருந்ததாக கூற முடியாது.

வண்ணார் ஜாதியைப் போல, நாவிதர் ஜாதியும் ஒவ்வொரு குடும்பத்துக்கு மிகவும் முக்கியமான பங்கு வகித்தனர். நாவிதர்களை குடிமகன் என்றும் ஓர் பெயர் உண்டு. இவர்கள் சிகை அலங்காரம் செய்யும் முக்கிய பணியை செய்தார்கள். அதே போல் மங்கல காரியங்களுக்கு எப்படி வண்ணார்கள் முக்கிய பங்கு வகித்தார்களோ அதே போல் அமங்கலம் காரியங்கள் நாவிதர்களால் தான் நடக்கும் குடிமகன் அல்லது நாவிதர்கள் குடும்ப பெண்கள் குடும்பத்தில் சிறு சிறு வைத்தியங்கள் பார்ப்பதுண்டு. அந்த காலத்தில் மருத்துவ வசதி தற்காலம் போன்று கிடையாது. ஒரு வீட்டில் குழந்தை பிறப்பதில் மருத்துவர்களாயிருந்து மருத்துவம் பார்ப்பது இந்த குல பெண்கள்தன் அந்த பெண்களுக்கு மருத்துவர்கள் என்று ஒரு பெயரும் உண்டு அது போல நாவிதர்களுக்கு மருத்துவர்கள் என்று ஒரு ஜாதி பெயரும் உண்டு ஒரு குழந்தை பிறந்து அந்த குழந்தைக்கு முதல் கருப்பட்டியை கறைத்து தண்ணீர் கொடுப்பார்கள். அப்படி கொடுத்த பின் தான் குழந்தைகளுக்கு முதல் கழிவு வெளியாகும். ஆகவே அந்த காலத்து மருத்துவர்கள் அவர்கள் தான். ஒரு வீட்டில் எந்த காரியங்கள் நடந்தாலும் அந்த செய்தியை ஊர் ஊராக சென்று தெரிவிக்கும் குடும்ப தூதுவர்களாக செயல்பட்டதும் இவர்கள்தான் தொலைத் தொடர்பு இல்லாத காலத்தில் தொலைத் தொடர்பு இனமாக செயல்பட்டது. இந்த இனத்தை சார்ந்தவர்கள் ஒரு வீட்டில் இறப்பு ஏற்பட்டால் ஊராருக்கு மணி அடித்து தெரியப்படுத்துவார்கள். சங்கு ஊதி அந்த அமங்கல செய்தியை ஊராருக்கு தெரிவிப்பார்கள். ஒரு வீட்டில் இறப்பு ஏற்பட்டால் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அந்த துக்க சம்பவத்தை நடத்தி அனைத்து சடங்குகளையும் செய்வது நாவிதர்கள் தான், மங்கள காரியத்தை எப்படி வண்ணார்கள் முன் நின்று செய்வார்களோ அதே போல அமங்கல காரியங்களை செய்வது இந்த ஜாதியினர். இவர்களில் மேளம் வாசிக்கும் ஒரு இடை ஜாதியினரும் உண்டு. - தொடரும்.




Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

**SRI LAKSHMI ENTERPRISES**

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

உ

Cell : 98402 87570



**மங்கள ஈஸ்வரி**

திருமண தகவல் கூடம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

(நேரம் : காலை 10.00 - பிற்பகல் 2.00

மாலை 4.00 - 7.00)



என். தெற்கு மாடவீதி, திருமுல்லைவாயல், சென்னை-62.

# பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் முதியவர்கள்.

D.M.ஜேம்ஸ் மார்ட்டின், தலைமை எழுத்தர் (ஓய்வு), மாவட்ட நீதிமன்றம், சாமுவேல் மருத்துவமனை வளாகம், திங்கள் நகர், நெய்யூர்-629802, கன்னியாகுமரி மாவட்டம், 9488129050.

1. உலகில் யாருமே முதியவர்களாக தோன்றுவதில்லை. நேற்று சிறுவர்கள், இன்று இளைஞர்கள், நாளை முதியவர்கள். நம்மை கேளாமலேயே வந்து போவது பருவம். எனவே முதுமை தவிர்க்க முடியாது. நாம் இளைஞராக இருக்கும் போது நமது விருப்பமான இடங்களுக்கு செல்கிறோம். வயது முதிர்ந்ததும் வேறொருவர் நாம் விரும்பாத இடத்திற்கு நம்மை இழுத்துச் செல்வர், என்கிறார் இறைமகன் ஏசு. எனவே நமது முதுமை காலத்தில் நல்ல துணை அவசியமாகிறது. அதை நிறைவேற்றுபவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

2. இன்றைய உலகில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களையும், பராமரிக்கயாருமின்றி அனாதையான முதியவர்களையும் காண்கிறோம். பெற்றோர், பிள்ளைகளை பெற்று வளர்த்து, நல்ல வேலையில் அமர்த்துகிறார்கள். கைநிறைய காசு வந்ததும், பெற்றோர் பால் தாங்கள் கடமைகளை மறந்து விடுகிறாள்கள், சிலர். இதனால் மனமுடைந்து முதியோர் இல்லங்களை தேடுகிறார்கள் வசதி படைத்த பெற்றோர். ஆதரவின்றி தவிக்கும் முதியோர் அனாதை இல்லங்களை நாடுகிறார்கள். அதனால் தான் முதியோர் இல்லங்களும் அனாதை ஆஸ்ரமங்களும் தோன்றுகின்றன. அன்னை இல்லம், ஆனால் அன்னை இருப்பதோ அனாதை இல்லம். அன்று கூட்டு குடும்பபமாக இருந்தபோது, தாத்தா பாட்டிகளை பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கவனித்துக் கொள்வார்கள் கூட்டுக்குடும்பம் சிதைந்தது, வயதான பெற்றோரை கவனிப்பாரில்லை. வயதான காலத்தில் பெற்றோர்களை சுமக்க வேண்டுமென்ற எண்ணம் மாறி அவர்களை சுமைகளாக காணும் காலமாக மாறிவிட்டது, இன்றைய உலகம்.

3.பிள்ளைகள் பொற்றோரை பாதுகாக்க தவறியதால் தான் கடவுள், மோசே வழியாக, தாய் தந்தையரை போற்றி பாதுகாக்க வேண்டுமென்ற 4வது கட்டளையை கொடுத்தார். தாய் தந்தையரை போற்றுவது பற்றி சீராக்கின் ஞானம் கூறுவது "சொல்லாலும் செயலாலும் பெற்றோரை மதிக்க வேண்டும், முதுமையில் அவர்களுக்கு உற்ற துணையாக இருக்கவேண்டும்," என்று. நிலை வாழ்வு பெற செய்ய வேண்டியதென்ன என்று கேட்கும் பணக்கார வாலிபனுக்கு ஏசு கூறும் பதிலும் தாய் தந்தையரை போற்று என்பது தான் முதியோருக்கு நாம் எப்படி பணிவிடை செய்யவேண்டும்மென்பதை அன்னை மரியாளின் மூலமாகவும் அறிகிறோம். தனது உறவினர் எலிசபெத் தனது முதிர்ந்த வயதில் கருவுற்றிருப்பதை அறிந்த அன்னை மரியா, உடனே சென்று அவருடன் தங்கியிருந்து அவருக்கு பணிவிடை செய்கிறாள். இது மனிதநேயத்தின் சிறந்த மாண்பு. இம்மாதிரி உறவுகள் தான் முதியோர்களையும் இளைஞர்களையும் இணைக்கும் பாலம்.

4.வயதான பெற்றோர் வறுமையில் வாடும்போது அவர்களை ஏறெடுத்தும் பார்க்காத பிள்ளைகளைப் பற்றி பிறவிக் கவிஞன் கண்ணீரோடு பாடும் பாடல்:-

1.குளத்திலே தண்ணியில்லே கொக்குமில்லே மீனுமில்லே பெட்டியிலே பணமில்லே பெத்தபுள்ள சொந்தமில்லே.

2.தென்னைய பெத்தா இளநீரு பிள்ளையை பெத்தா கண்ணீரு பெத்தவள் மனமே பித்தம்மா பிள்ளை மனமே கல்லமம்.

3.பானையிலே சோறிருந்தா பூனைகளும் சொந்தமடா சோதனையை பங்குவச்சா சொந்தமில்லே பந்தமில்லே.

இதயத்தை தொடும் இதமான வார்த்தைகள்.

5.சிறுவயதில் பொற்றோரை இழந்து அனாதையாக தெரு ஓரங்களில் வாழ்ந்த ஜெர்மனியின் ஹிட்லர் தான் முதன் முதலில் முதியோருக்கு வாழ்நாள் ஓய்வூதியமும் இலவச மருத்துவ சலுகைகளும் அறிமுகம் செய்தவன். நமது தமிழ்நாட்டில் முதியோருக்கு ஓய்வூதியம் வழங்கியது ஏழைபங்காளன், படிக்காத மேதை, பெருந்தலைவர் காமராஜர். உலகெங்கும் முதியோர்களுக்கு சலுகைகள் வாரி வாரி வழங்கும்போது, உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்று பெருமை பேசும் பா.ஜ.க. மோடி அரசு, முதியோருக்கு வழங்கப்பட்டு வந்த பிராயான சலுகையை ரத்து செய்தது, பா.ஜ.க.வின் சாதனை. முதியோருக்கு வேதனை.

6.பிள்ளைகள் பெற்றோரை பாதுகாக்க வேண்டும், ஜீவனாம்சம் வழங்க வேண்டுமென்று சட்டங்கள் உள்ளது. தனி மனிதன்திருந்தாவிடில் சட்டங்கள் வெறும் காகிதப்பூ போல் மணம் வீசும். பெற்றோர் பிள்ளைகள் உறவை உணர்த்தவே அக்டோபர் முதல் தேதியை முதியோர் தினமாக கொண்டாட ஐ.நா.சபை பணித்திருக்கிறது. நமது பாப்பரசர் திருத்தந்தையும் ஜூலை 4ம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருப்பலியை தாத்தா பாட்டி தினமாக கொண்டாட அழைக்கிறார். Old is Gold என்பது போல முதியோர்கள் முதிர்ந்த ஞானிகள் என்கிறார், புதிய தேடல் ஆசிரியரும், அருட்பணியாளருமான முனைவர் எ.ஒய்சிலின் சேவியர். எனவே முதியோர்களை போற்றுவோம், பராமரிப்போம், பாதுகாப்போம். அனாதை முதியோர் இல்லங்களே இல்லாத நாடாக்குவோம்.


# Velan Kraft House (P) Ltd.



**Raw Material Suppliers To Paper Mills - Since 1972**

**R.Santhana Krishnan Director**

Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 020.
Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com
Web:www.velankraft.com

# வா....வியாபாரி ஆகலாம்

அமுதா B.பாலகிருஷ்ணன்

7. "டென்ஷன்" ஆகலாமா..........?

நாமும் "டென்ஷன்" ஆகக் கூடாது, முதலாளியையும் டென்ஷன் ஆக்கக்கூடாது!



ஒரு நாள் சுறு சுறுப்புக் குறைந்தாலும்... ஒரு நாள் என்ன... ஒரு மணி நேரம் சுறுசுறுப்புக் குறைந்தால் கூட..... ஏன், எதுக்கு, - ஏன் அவன் அப்படியிருக்கான்"னு முதலாளி முடியப் பிச்சுக்குவாரு.

"இல்லண்ணாச்சி... அது அப்படியாச்சு, இது இப்படியாச்சு.... அதனாலதான் இப்படி இருக்கேன்"-னு விளக்கம் கொடுப்பது ஒரு ரகம்,

"ம்... ஒண்ணுமில்ல"..

"என்ன... ஒண்ணுமில்ல?"

"ஒண்ணுமில்லண்ணாச்சி.... சும்மாதான்"

"ஒண்ணுமில்லாததுக்கா மூஞ்ச "உம்" - முன்னு வைச்சிட்டிருக்க..."

"ம்.."- இது இரண்டாவது ரகம்.

முதல் ரகம் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

"சரி...சரி...விடு, சரியாய்ப் போயிடும், இதெல்லாம் பெரிசா எடுத்துக்காத -ன்னு ஏதோ ஒரு சமாதானமோ, ஆறுதலோ சொல்லி அந்த நிமிஷமே அதை சரி பண்ணிடலாம்.

ஆனால், இந்த இரண்டாவது ரகம் இருக்கே... இதுதான் தானும் டென்ஷன் ஆகி முதலாளியையும் "டென்ஷன்" - ஆக்குகிற ரகம்.

ஏன் எதுக்குன்னு சொல்லியும் தெரிவிக்கமாட்டாங்க, சுறுசுறுப்பையும் இழந்து, "இஞ்சிதின்ன குரங்கு மாதிரி" உம்முன்னு வைச்சிட்டு அலைவாங்க.

இவங்களால வியாபாரத்துக்கும் நஷ்டம், முதலாளிக்கும் கஷ்டம்.

பிரச்சினைவராத இடமும் இல்லை, பிணியே வராத உடலும் இல்லை.

வரும்.. வரத்தான் செய்யும்.

அதைத் தீர்ப்பதற்கு வழி தேடி உடனே குணப்படுத்த வேண்டுமே ஒழிய,

உள்ளுக்குள்ளே வைத்துக் கொண்டு, முற்ற வைத்துப் புரையோடிப் போக நாம் காரணமாக இருக்கக் கூடாது.

சிலர் சிறு துரும்பைக் கூடத் தூணாக நினைத்து, அல்லது வெளிப்படுத்தி, முதலாளிக்கு டென்ஷனை ஏற்படுத்துவார்கள்.

ஒரு தலைவலி அல்லது வயிற்றுவலி வருகிறது. "ஐயோ... அம்மா... ஆ...ஊ"-ன்னு ஒரு பெரிய "சீனையே" கிரியேட் பண்ணி, எல்லோரும் தன்னைப் பார்த்து "ஐயோ பாவம்"-னு அனுதாபப் படணும், தாங்கணும், தாங்கிப் பிடிக்கணும்னு மிகைப்படுத்தி "பாவ்லா" பண்றவங்க ஒரு ரகம்.

ஒரு மாத்திரையை வாங்கிப் போட்டுகிட்டு, முடிஞ்சவரைக்கும், யாருக்கும் காட்டிக்காம வேலை செய்யிறது ஒரு ரகம்.

ஒருவேளை முடியாம போய், அளவுக்கு அதிகமாக வந்திடிச்சின்னா, நம்மை அறியாமலே நம்மிடம் ஒரு தளர்ச்சி வரும்.

நிச்சயம், முதலாளியால அதை உணர முடியும்.

முதல் ரகத்துக்காரனைப் பார்த்தால் இரக்கம் வராது, எரிச்சல்தான் வரும்.

இரண்டாவது ரகத்தின்மீது ஒரு பரிவும் அனுதாபமும் வரும்.

"அடடா...ஆரம்பத்துலேயே சொல்லியிருக்கலாமே... பய இந்த அளவுக்கு இழுத்து வைச்சுகிட்டானே.. ஏய்யா நீ போய் ரெஸ்ட் எடுத்துக்க, ஆஸ்பத்திரிக்கு போய் பாத்துட்டு வா" -ன்னு முதலாளியே கூப்பிட்டுச் சொல்வாரு.

அதுமட்டுமல்ல...

"இந்தப் பய வேலையில் கெட்டிக்காரன். கைல கால்ல ஒரு அடிபட்டாக்கூட, தடவிவிட்டுட்டு அவன் வேலையை அவன் பார்த்துகிட்டேயிருப்பான்... ஆனால், அவனும் இருக்கானே.. அடியே படாட்டியும் கூட ஆ... ஊன்னு கத்தி ஒரு ரகளையே பண்ணிடுவான்" -னு முதலாளி சொல்வாரு.

நாம அந்தப் பொறுப்பான குமாஸ்தாவாத்தான் இருக்கணும், அப்பதான் அந்த முதலாளி மனசுல நாம இடம் பிடிக்கமுடியும்.

இடம் பிடிக்கிறதையும் விட, நமக்கே, உள்மனசுல ஒரு உற்சாகமும் வேகமும் வரும்.

"எப்படி இவன் மட்டும் எதைப் பற்றியும் கவலைப்படாம எப்பவும் சுறுசுறுப்பா இருக்கான்.. இருக்க முடியுது"ன்னு மத்தவங்க ஆச்சரியப்படுற அளவுக்கு இருக்கும்.

இப்படி மத்தவங்க நினைக்கிற அளவுக்கு நடக்கும் போது, நமக்கு ஒரு பெருமிதமும் தெம்பும் தானாக வரும்.

அதுதான் நமக்கு டானிக்.

ஆனால் அந்தப் பெருமிதமும் தெம்பும் நமக்குத் தலைக்கனத்தைக் கொடுத்திடக்கூடாது.

தலைக்கனம் வந்தால்...

நாம் சரிந்துவிடுவோம்.

திறமைசாலி என்ற பெயர் எடுக்க வேண்டுமே தவிர, திமிர் பிடித்தவன் என்ற பெயர் மட்டும் எடுக்கவே கூடாது.

ஆணவம், கர்வம், தலைக்கனம்... எது வந்தாலும் அழிவு நிச்சயம்.

தீப்பெட்டியும் தீக்குச்சியும் பேசிக் கொண்டிருந்தன.

"நாம ரெண்டு பேரும்தான் உரசிருக்கிறோம், நீ அப்படியே இருக்கே, நான்பட்டும் எரிஞ்சு போயிறேன். .. ஏன்? -னு கேட்டது தீக்குச்சி.

"எனக்குத் தலைக்கனம் இல்ல. உனக்குத் தலையில் கனம். அதான் நீ அழிஞ்சு போறே"-ன்னு சொன்னது தீப்பெட்டி.

தலைக்கனம் வந்தாலே உரசத்தான் சொல்லும்...!

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.10.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

